பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா: 6.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 29 | திங்கட்கிழமை (12-05-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 144



# பாலாவுக்கு திடீர் சுகவீனம் நேற்று லண்டன் பயணமானார்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சுகவீனம் காரணமாக நேற்று லண்டனுக்குச் சென்றார். இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியிலிருந்து நேற்று கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்ற அன்ரன் பாலசிங்கமும் திருமதி அடேல் பாலசிங்கமும் இன்று அதிகாலை கட்டுநாயக்கா விமானம் மூலம் லண்டன் பயணமாகினர். கிளிநொச்சியிலிருந்து நேற்று கொழும்புக்குப் புறப்பட்ட அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை ஏற்றிச் சென்ற உலங்குவானூர்தி சீரற்ற காலநிலை காரணமாக அநுராதபுரத்தில் தரை இறக்கப்பட்டது. பின்னர் காலநிலைக்கு ஈடுகொடுக்கக்கூடிய உலங்குவானூர்தி வரவழைக்கப்பட்டு அதில் இருந்து அவர் கொழும்பு பயணமானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

### இலங்கையில் என்னை அவமதித்துள்ளனர்

# எனது பொறுப்பை பரிசீலிக்க உள்ளேன்

## "இந்துவுக்கு" சதீஸ் நம்பியார் பேட்டி

(புதுடில்லி)

**உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான எனது அறிக்கை அரசியல் கட்சித் தலைவர்களின் கண்டனத்திற்கு உள்ளாகியிருப்பது என்னை தடுமாற வைத்துள்ளது. இலங்கையில் சமாதான முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவது குறித்து நன்கு ஆலோசிக்க உள்ளேன். இவ்வாறு இந்திய முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார்.**

வடபகுதியில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் மீளமைப்பது தொடர்பாக இலங்கை அரசிடம் இந்திய முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரினால் கையளிக்கப்பட்ட அறிக்கை இலங்கையின் அரசியல் கட்சிகளின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியிருப்பது தொடர்பாக புதுடில்லியிலிருந்து வெளியாகும் இந்துப் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இப் பேட்டியில் சதீஸ் நம்பியார் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஒருவரை ஆழ்ந்த நம்பிக்கையோடு அழைத்து சில விடயங்களை அணுகி ஆராய்ந்து வெளியிடும்படி கூறிவிட்டு பின் அவரை அவமதிப்பது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகும்.

நோக்கங்கள் கருத்துக்கள் வேறுபட்டவையாக இருக்கலாம். முரண்பாடு உள்ளவையாக இருக்கலாம். இந் நிலையில் எல்லோரும் எனது கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என நான் கோரவும் இல்லை, கட்டாயப்படுத்தவும் இல்லை.

இந்த அறிக்கையை நான் யாரோ ஒருவரின் செல்வாக்கிற்கு உட்பட்டு தயாரித்து அளித்துள்ளேன் எனக் கூறப்படுவது எனக்கு மிகவும் கவலையளிப்பதுடன் என்னை நிலைகுலையச் செய்தது. எனது சுய மரியாதையையும் பெருமளவு பாதித்துள்ளது. சுய மரியாதையே ஒருவனால் அதியுயர்வாகக் கருதப்படுவது என நான் ஐக்கிய நாடுகள் படையின் தலைவனாக யூக்கோசுலோவியாவில் இருக்கும்போது கூறப்பட்டதன் உண்மையை தற்போது நன்கு நான் உணர்கின்றேன்.

நான் இலங்கை அரசிடம் இருந்து ஒரு சதம் கூட இதற்கு ஊதியமாகப் பெறவில்லை. அவர்கள் என்னிடம் ஆலோசனைகள் கேட்டதற்கு அமைவாக எனது அவதானிப்புக்களை வைத்து ஆலோசனை வழங்கினேன்.

எனது ஆலோசனைகளைவிட வேறு எவரினது ஆலோசனைகள் சரியெனப் படின் அதற்கமைய அரசாங்கம் நடந்துகொள்ளலாம். நான் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் எனது தனித்துவமான கருத்துக்களையே இங்கு குறிப்பிட்டுள்ளேன். நான் ஒரு இந்தியப் பிரஜை என்ற வகையில் இந்திய அரசிற்கு எந்தவிதமான இழுக்கும் என்னால் ஏற்படுவதற்கு பொறுப்பாக இருக்கமாட்டேன் என்றும் சதீஸ் நம்பியார் தெரிவித்தார். (ம)

அன்பு வாசகர்களே!
இன்று உங்களின்
சங்குநாதம்
விஷேட அரசியல் கட்டுரையுடன்
விலை ரூபா. 12/-



காலஞ்சென்ற குமார் பொன்னம்பலத்திற்கான மாமனிதர் விருதை தலைவர் பிரபாகரன் திருமதி குமார் பொன்னம்பலத்திடம் கையளிப்பதையும் அருகில் குமாரின் பிள்ளைகள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நோர்வே அமைச்சர் பீற்றசன் 14ம் திகதி இலங்கை வருவார்

### தலைவர் பிரபாவுடனும் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றசன் எதிர்வரும் 14-ம் திகதி இலங்கை வரவுள்ளதாக நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டே பீற்றசன் இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரும் பீற்றசன் இரண்டு தினங்கள் இங்கு தங்கிநின்று அரசாங்க உயர் மட்டத்துடனும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இவருடன் நோர்வே பிரதிநிதி பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்கள் இருவரும் 15-ம் திகதி திட்டமிட்டவாறு விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திடீர் சுகவீனம் காரணமாக லண்டன் சென்றுள்ளபோதிலும் இச் சந்திப்பு திட்டமிட்டவாறு நடைபெறும் என நோர்வேத் தூதரகம் அறிவித்துள்ளது. (ந-5)

# பாதுகாப்பு; தகவல் தொடர்பு அமைச்சுக்களை ஜனாதிபதி எந்நேரமும் பொறுப்பேற்கலாம்

### பொ.ஐ.முன்னணி இன்று அவசரமாகக் கூடுகிறது

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொறுப்பேற்றதை அடுத்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலை குறித்து விவாதிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழு இன்று அவசரமாகக் கூடுகிறது.

நுவரேலியாவில் விடுமுறையைக் கழித்துவிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கொழும்பு திரும்பியதை அடுத்து இச் செயற்குழுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை பொதுஜன ஐக்கிய முன்னணி செய்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

தற்போது எழுந்துள்ள ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதி இன்னமும் பொறுமையைக் கடைப்பிடிக்காமல் தனது அதிகாரங்களைப் பாவித்து உறுதியான, தீர்க்கமான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள கட்சித் தலைவர்கள் இக் கூட்டத்தில் ஜனாதிபதியைக் கோரவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு ஆகியவற்றின் பொறுப்புக்களையும் ஜனாதிபதி எந்நேரமும் பொறுப்பேற்கலாம் என்றும் இனப்பிரச்சினை தொடர்பாக தற்போதைய சமாதான முயற்சியை ஜனாதிபதி தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல விரும்புவதாகவும்

(10ம் பக்கம் பார்க்க)

# அமரர் குமாருக்கு மாமனிதர் விருது வழங்கப்பட்டது

(கிளிநொச்சி)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்னாள் தலைவர் அமரர் குமார் பொன்னம்பலத்திற்கான மாமனிதர் விருதினை அவரது குடும்பத்தினருக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் நேற்று வழங்கிக் கௌரவித்தார்.

தமிழ் மக்களுக்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவையினைப் பாராட்டி மாமனிதர் விருதினையும் அதற்கான ஆவணத்தையும் தலைவர் வே. பிரபாகரன் திருமதி குமார் பொன்னம்பலத்திடம் வழங்கினார்.

இந் நிகழ்வில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆக்கிரமிப்பு அரசுகளால் எம்மீது திணிக்கப்பட்டதே ஆயுதப்போர்

## இந்தியப் பேராளர்களுக்கு பேராசிரியர் சிற்றம்பலம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**எமது முன்னைய அரசியல் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட சாத்வீக ரீதியிலான போராட்டங்கள் இனவாத அரசாங்கங்களினால் அடக்கப்பட்டு அவை தோல்வியில் முடிவடைந்தமையினாலேயே நாம் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.**

**இந்த ஆயுதப்போராட்டத்தை எந்தக்கட்டத்திலும் நாம் விரும்பி ஏற்க வில்லை. ஆக்கிரமிப்பு அரசுகளால் எம்மீது திணிக்கப்பட்டதே ஆயுதப் போர்.**

யாழ். பிராந்திய இந்து மாநாட்டு இரண்டாம் நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் இடம் பெற்றபோது ,இந்தியாவில் இருந்து இம்மாநாட்டுக்கு வருகை தந்த பேராளர்களுக்கு தமிழர்களின நிலைப்பாடு தொடர்பாக விளக்க மளித்த யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றப்பலம் இவ் வாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் அங்கு தொடர்ந்தும் கருத்துரையாற்றுகையில்,

இங்கு தமிழர்களால் மேற்கொள் ளப்பட்டது மண் மீட்புப்போரே தவிர, மண் ஆசையாலோ அன்றி மாற் றாரை மண்டியிட வைக்கும் நோக்கத் தாலோ,கொலை வெறிகொண்ட தாலோ நடத்தப்பட்டதல்ல.

தமிழர்களின் உரிமைகள் பறிக்கப் பட்டபோதெல்லாம் ஜனநாயக வழி முறைகளுக்கு அமைவாக சாத்வீகப் போராட்டங்களை மேற்கொண்ட எம் தலைவர்கள் எதிர் கொண்ட துன்ப,துயரங்கள்,சவால்களை அயல் வீட்டில் இருந்தவர்கள் என்ற வகை யல் தாங்கள் அறியாதிருக்க நியாய மில்லை.

அடக்கப்பட்டவன் அடக்கு முறைக் கெதிராக கிளர்ந்தெழுவது உலக வரலாறு என்ற வகையில் இங்கு இடம்பெற்றிருப்பது ஒன்றும் புதுமை யான நிகழ்வல்ல. வந்தேறு குடிகள் என எம்மை இழிவுபடுத்திய போதெல்லாம் எங்கள் மனம் பட்ட துன்பங்களை சொல்லில் வடிக்க இயலாது.

எங்களுடைய போராட்டம் நாங் கள் இலங்கையின் பூர்வீக குடிகள் என்பதை உலகெல்லாம் பறை சாற்ற உதவியிருக்கிறது.

தவிரவும், இங்குள்ள தொல்பொருட சான்றுகள் இதனை எடுத்தியம்பு வதை நாம் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும்.

வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் பிரதேச பிரித்தாண்ட பிரித் தானியாவின் சூழ்ச்சியால் வந்தேறு குடிகள் என மாற்றார் இழிந்துரைக் கும் நிலைக்கு நாம் ஆளாக்கப் பட்டோம்.

எமது சுதந்திரத்திற்காக நாம் உதிரம்சிந்தி உழைக்கிறோம். பல ஆயிரக்கணக்கான போராளிகளை யும், பொதுமக்களையும் எமது மண்ணை மீட்டெடுப்பதற்காக இழந் திருக்கிறோம்.

ஏன? சொத்து, சுகத்தைக்கூட எமது மண்ணின் விடிவிற்காக நாம உதறித தள்ளியிருக்கிறோம். ஒரு நிலையான நாம் விரும்பும் தீர்வு கிடைக்கு மட்டும் நாம் ஓயப்போவது இல்லை.

இந்தியாவிலுள்ள எமது இரத்த உறவுகளிடம் நீங்கள்போய் இதைச் சொல்ல வேண்டும். தமிழர்களுக் கென்று இங்கு ஓர் தாயகப் பிரதேசம அமையுமானால் இந்தியாவில் வாழும் எங்கள் உறவுகளும் அதன் பயனை உணரமுடியும்.

எனவே, இனியும் இந்தியா எமது விடயத்தில் பார்வையாளராக இருக் காது பங்காளர்களாக மாற வேண்டும். இதுதான் ஈழத்தமிழர்களின் அவா, இன்றையகோரிக்கை என்று குறிப் பிட்டார்.

இந்த இடத்திலே, இந்தியாவில் வாழும் எங்கள் சகோதரர்கள் எங் களுக்காக குரல்கொடுத்தமைக்காக பட்டுவரும் இன்னல்கள், இடர்களை யும் நாம் நினைவுகூற வேண்டும் என்றார். (உ-4)

# வர்த்தமானி வெளியிடும் அதிகாரத்தை சில அமைச்சர்கள் தடுக்க முற்பட்டனர்

## ஜனாதிபதி வட்டாரங்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசுத்தலைவர் என்ற வகை யில அரசாங்க வர்த்தமானி ஒன்றை வெளியிடும் சட்டபூர்வமான தனது நடவடிக்கையொன்றினை சுறறி வளைத்து இடைமறிக்கும் செயல் அடக்குமுறையானதும் தன்னிச் சையானதுமாகும். இதில் சில அமைச்சர்கள் ஈடுபட்டிருந்தனர் என்று ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்க வர்த்தமானி அறிவித் தல் வெளியிடப்படுவதை தவிர்க் கும விதத்தில் செயற்படுமாறு மக்கள தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் சட்டத்திற்கு முரணான முறையில் அரச அச் சகக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு எழுத்து மூலமான அறிவுறுத்தலை வழங்கியுள்ளார் என்றும் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி முற்றிலும் சட்ட முறைப்படியான,நிர்வாக ரீதியான தீர்மானம் ஒன்றையே மேற்கொண் டார்.அபிவிருத்திலொத்தர் சபையி னால் பெறப்படும் இலாபம் முழு வதும் ஜனாதிபதி நிதியத்திற்கே செலுத்தப்படுகிறது. இதனால் அபி விருத்தி லொத்தர் சபை ஜனாதி பதியின நிர்வாகத்தின் கீழேயே இருத்தல் வேண்டும். புதிய அரசாங் கம் அமைந்தவேளையில் இச் சபை கருதாப்பிழை காரணமாக வேறு ஒரு அமைச்சருக்கு வழங் கப்பட்டு விட்டது.ஜனாதிபதி நிதியத் திலிருந்து சபையை வேறாக்கி வைப் பதில் இரு அமைச்சர்கள் முனைப் புடன் செயறபட்டுள்ளனர். இவ்விட யம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் ஜனாதிபதி கடிதத் தொடர்புகளை வைத்திருந்தார்.இது பற்றி பிரதமருக்கும் தெரியும். இவ் வாறு ஜனாதிபதி வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (தி)

## சிவாஜிலிங்கம் எம்.பி. மண்டைதீவு செல்ல நிபந்தனையுடன் அனுமதி

(திருநெலவேலி)

மண்டைதீவு மக்களின் அவல நிலையை நேரில் கண்டறியச் சென்ற யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கடற்படையால் தடுத்து நிறுத்தப் பட்டார்.

இச் சம்பவம் பற்றிதெரியவருவ தாவது,

நேற்றைய தினம் காலை 8 மணியளவில் மண்டைதீவுக்குச் சென்ற சிவாஜிலிங்கம் எம்.பியை மண்டைதீவுச்சந்தியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் சுமாா ஒரு மணி நேரம் தடுத்து வைத்து துரு வித் துருவி விசாரணை நடத்தியுள் ளனர்.

பின்னர் 3 மணி நேரங்களுக்கு மேலாக மண்டைதீவுப்பகுதியில் தங்கி நிற் கக்கூடாது என்ற நிபந்தனையுடன் உள்ளே செல்ல அனுமதித்தனர்.

அங்கு சென்ற அவர்,பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதி களைச் சந்தித்து அவர்கள் படும் துன்ப துயரங்கள் குறிததுக் கேட்டறிந்தார்.

அப்போது மீனவர்களால் தமது தொழிலைச் செய்வதில் ஏற் பட்டுளள சர்கேடுகள் மற்றும் கடற் படை யின் பாஸ் நடைமுறைக்



கெடுபிடிகள் தொடர்பாக எடுத்து விளக்கப்பட்டது.

அத்துடன்,இப்பகுதி மக்களின் வீடுகளில் உறவினர் தங்குவதில் எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள், கல்வி சுகாதார நிலைமைகள் குறித்தும் விரிவாக மக்கள் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை,புனித பேதுருவான வர் முன்பள்ளி,மதிஒளி முன்பள்ளி ஆகியவற்றை புனரமைப்பதற்கென வும் தளபாடக்கொள்வனவுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாவை சிவாஜி லிங்கம்எம்.பி.ஒதுக்கியுள்ளார். (உ-43)

## ஏ-9 வீதி திருத்தம் மந்த கதியில்

(செம்பியன்பற்று)

ஏ-9 வீதி திருத்தும் பணி ஆரம் பிக்கப்பட்டுள்ள போதிலும் மந்த கதியில் இப்பணி இடம்பெறுவது குறித்து பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மந்தகதியில் பணிகள் இடம்பெறுவதால் பொதுமக்கள் பல்வேறு போக்குவரத்து சிரமங் களுக்கும் ஆளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-42)

## மாவீரர் குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதி

(கிளிநொச்சி)

திருகோணமலை பள்ளிக்குடி யிருப்பில் உள்ள 31 மாவீரர்களின் குடும்பங்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் பொருட்டு முதல் கட்ட மாக தலா 7ஆயிரம் ரூபா நிதியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் வழங்கியுள் ளனர். (உ-10)

## மாகாண மட்ட விளையாட்டுக்கள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

வடக்கு -கிழக்கு மாகாண பெரும் விளையாட்டுப் போட்டியின் இரு விளையாட்டுக்கள் நேற்று முன் தினம் கிளிநொச்சி மத்திய மைதா னத்தில் ஆரம்பமாகியுள்ளன.

கால்ப்பந்தாட்டம் மற்றும் கபடிப் போட்டிகளே இவ்விதம் ஆரம்ப மாகியுள்ளன.

தொடர்ந்து 10 நாட்கள் வரை இவ்விளையாட்டுக்கள் இடம்பெற விருப்பதாக அறிவிக்கப்பட்டுள் ளது. (உ-10)

# அமெரிக்கா- இலங்கை இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

## விரைவில் ஏற்படும் சாத்தியம்

(கொழும்பு)

அமெரிக்காவிடம் சுதந்திர வர்த் தக உடன்படிக்கை ஒன்றில் கைச் சாத்திடும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்திருப்பதாக அமெரிக்க வர்த்தக இராஜாங்கப் பிரதிநிதி றொபேட் செரீப் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பொருளாதாரத்துக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் வாஷிங்டனில் நடைபெற்ற கருத் தரங்கில் அவர் இதனைத் தெரி வித்ததாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித் துள்ளது.

அமெரிக்காவுடன் இவ் உடன் படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் பொருளாதாரச் சீர்திருத் தம் அமெரிக்காவின் வர்த்தகக் கொள்கைகளுக்கான ஆதரவு அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கைகளுக்கான ஒத்துழைப்பு வர்த்தக உடனபடிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதன் மூலம் பிராந்திய மட்டத்தில் ஏற்படக்கூடிய தாககம் ஆகிய 4 விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அமெரிக்காவுடன் செய்துகொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டுக்கட்ட மைப்பு உடன்படிக்கையின் பல னாகவே அமெரிக்காவுடனான சுதந் தர வர்த்தக உடன்படிக்கையில கைச் சாத்திடும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (தி)

# நடைபாதை வியாபாரிகளை அகற்றும் முயற்சி துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை வீதி யில் உள்ள நடைபாதை வியாபாரி களை அவ்விடத்தில் இருந்து அகற்றும் நோக்குடன் வைத்திய சாலைக்கு முன்புறமாகவுள்ள நடை பாதைக்கு நெறகம்பி வேலிகள் போடப்படுகின்றன.

நேற்று முன்தினம் முதல் யாழ் மாநகர சபையினர் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனையடுத்து ஒரு சில தினங்களில் இப் பகுதியில் இருந்து நடைபாதை வியாபாரிகள் அகன்று விடுவர் என எதிர்பார்க்கப்படு கின்றது. (உ-51,7)

## வெளிநாட்டு நிறுவனங்களில் கடமையாற்றும் சாரதிகளுக்கு போக்குவரத்து பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தில் கடமையாற்றும் வாகன சாரதி களுக்கான வீதி ஒழுங்கு முறை கள்,விபத்துக்களை தடுக்கும் முறை கள் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் காலை கோயில் வீதியில் அமைந்திருக்கும் யு.என்.எச். சி.ஆர். அலுவலகத்தில் இடம் பெற்றது.

யாழ்.போக்குவரத்து கண் காணப்புப்பிரிவுப் பொலிஸாரால் மேற்படி கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இவ்வாறான கருத்தரங்குகள், ஏனைய வெளிநாட்டு நிறுவனங் களின் சாரதிகளுக்கும் வழங்கப் படவிருப்பதாக போக்குவரத்து கண் காணிப்புப்பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-7)



யாழ்.நகர மத்தியிலிருந்து நடை பாதை வியாபாரிகளை அகற்றுவதற்காக வேலியிடும் நடவடிக்கையில் யாழ்.மாநகர சபையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். படம்: க.பவன்

# ஐ.நா.சபையின் மிகப் பெரிய இராஜதந்திரி யசூசி அகாஷி

**மே 9 ஆந் திகதி வெளியான புரொண்ட்லைன் சஞ்சிகையில் வெளியான யப்பான் தூதுவர் அகாஷியுடன் பத்திரிகையாளர் என்.ராம் நடத்திய பேட்டியின் சாராம்சம் இங்கு தமிழில் தரப்படுகின்றது. (ஆ-ர்)**

நோர்வே மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் ஆரம்பித்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்போது சிக்கலானதும் கட்டத்தில்- கடந்த இருபது வருட காலத்திற்கும் மேல், நிதியுதவி வழங்கி வரும் நாடான ஜப்பான் மற்றைய முக்கிய நிதி வழங்கும் நாடுகளையும் இணைத்து 9,10ஆம் திகதிகளில் ஜூன் மாதத்தில் நிதி உதவி மாநாட்டை நடாத்த ஆயத்தப்படுகின்றது.

1994ம் ஆண்டிலிருந்து நோர்வே அரசாங்கம் இனங்களுக்கிடையிலான பூசல்களையும், மற்றும் வந்துள்ளது, வருகின்றது. ஆனால் கூர்ந்து அவதானித்து வரும் இந்தியா - இலங்கைக்கு பொருளாதார உதவியை வழங்கும் ஜப்பான் வேறும் பெரியதொரு எதிர்பார்ப்பு ஒன்றையும் கருத்தில் கொண்டிருக்கலாம் என இந்தியா நம்புவதில் தவறு இல்லை.

இப்பேட்டியை நாடத்திய என். ராமிடம் அவர்களின் ஜப்பான் விஜயத்தின் போது அந்நாட்டின் உயர் மட்ட முன்னெடுத்துச் செல்கின்றார். இக்கொள்கையின் முக்கிய நோக்கம், சமாதானத்தைச் கட்டியெழுப்புவது அல்லது சமாதானத்தை பலப்படுத்தல் ஆகும். இதற்கமைய இலங்கையின் யுத்த நிறுத்தம் ஏற்பட்டகாலம் தொட்டு "சமாதானத்தை கட்டியெழுப்பும்" நடவடிக்கைகளில் ஜப்பானிலும் உலக அரங்கிலும் ராஜதந்திர நடவடிக்கைகளில் புகழ்பெற்றவரான யசூசி அகாஷி நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியில் இவர் NATO நாடுகளின் அதிருப்தியை சம்பாதித்துக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக தொன்றாகும்.

அகாஷியின் முக்கிய குறிக்கோள் யாதெனில் ஒரு நாட்டின் எத்தகைய சிக்கலான பிரச்சினைகளையும்



## அகாஷியும் சதீஸ் நம்பியாரும்

சவால்க்குரியதுமான நிலையை அடைந்துள்ளன.



அரசியல் குளறுபடிகளையும் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை தொடர்ந்து செய்துவருகின்றது. ஆனால் யப்பான் நாடு கடந்த 18 மாதங்களாகத்தான் இலங்கையின் உள்நாட்டு பூசல்களில் ஈடுபட்டு வருகின்றது.

அதிகாரி ஒருவர் கூறுகையில், நாங்கள் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இதய சுத்தியோடு உதவுகின்றோம். மேலும் எங்களுடைய பலமான எதிர்பார்ப்புக்கள்

***யசூசி அகாஷி***

ஜப்பானின் போர்த் தடுப்பு மத்தியஸ்தானத்தின் பணிப்பாளரான யசூசி அகாஷி 72 வயது நிறைந்தவர். ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள அர்த்தபுஷ்டியுள்ள

தீர்க்க யுத்தத்தினால் முயற்சி செய்வதிலும் பார்க்க முதிர்ந்த ராஜதந்திரத்தினாலும், அரசியல் முதிர்வினாலும்

இந்த இருநாடுகளின் தலையீடு மற்றையநாடுகள் குறிப்பாக இந்தியாவுக்கு ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் கொடுத்துள்ளது. மேலும் அயல்நாடான இந்தியா-ஜப்பானின் தலையீட்டை மிகவும் கவனமாக அவதானித்து வருகின்றது.

## ஒன்றாகப் பணியாற்றியவர்கள்

இந்நிலையில் சர்வதேச நாடுகளுக்கு இதுவிடயத்தில் எந்த வகையில் உதவலாம் அல்லது ஒதுங்கிக் கொள்ளலாம் என்ற ஒரு சிக்கலை உருவாக்கியிருக்கின்றது. பரம்பரையாகவே நிதி வழங்கும் நாடுகள் நிலைப்பாடு இல்லாததும் யுத்தம் கலந்த சூழ் நிலையில் உள்ளதுமான நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வது மிகவும் குறைவு. ஆனால் ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரையில் மேற்படி விடயத்தில் சில விதிவிலக்குகள் உண்டு. இக்கட்டானதொரு

**தமிழில் மூர்த்தி**

மேலும் தூர கிழக்கில் உள்ள நாடு இந்தியாவின் அயல் நாடான இலங்கைக்கு அதிக அக்கறை காட்டுவதை இந்தியா விரும்பவில்லை. கடந்த 20 வருடகாலத்திற்கும் அதிகமாக ஜப்பான் இலங்கைக்கு உதவி வழங்கி வருகின்றது. ஜப்பானின் பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றிய போது கூட இலங்கைக்கு மற்றைய நாடுகளை விட அதிக உதவிகள் வழங்கி

பொருளாதார சமூக அபிவிருத்திகளிலும் மனிதாபிமான உதவிகளிலுமே தங்கியிருக்கின்றன. மேற்படி விடயங்களை ஜப்பானிய சமூகமும் தீவிரமாக ஆதரிக்கின்றது. எதிர்வரும் ஜுன் 9ஆம், 10ஆம் திகதிகளில் ஜப்பான் நாட்டில் நிதிவழங்கும் நாடுகள் மாத்திரமல்லாமல், அரசியல் உதவி அல்லது ஆலோசனைகள் வழங்கக்கூடிய நாடுகளும் கலந்து கொள்வது மனப்பூரணமாக வரவேற்கப்படும்.

2002ஆம் ஆண்டு மே மாதம் ஜப்பானின் பிரதம மந்திரி யூனிச்சிரோ கொய்சுமி, புதிய சர்வதேச கொள்கையொன்றை குறிப்பாக, யுத்தம் நடைபெறும் பகுதிகளுக்கு உகந்தானதாக உருவாக்கினார். இதை வெளிவிவகார அமைச்சர் வெற்றிகரமாக

எத்தகைய பதவியிலும் செயலாற்றும் வல்லமை படைத்த, முதற்தரமான ஜப்பானிய பிரஜை என கூறின் அது சாலப் பொருந்தும். 1957ல் ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து 20 வருடங்களுக்கு அதிகமாக் கடமையாற்றினார். அவரது அதியுயர் திறமையினால் மனிதாபிமான விவகாரங்கள் பிரிவுக்கு உதவிச் செயலாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இதற்கமைய ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்கப்பட்டதும் யுத்தப் பிரதேசங்களில் வேலை செய்வதுமான இரண்டு பணிகள் அவருக்கு வழங்கப்பட்டது. இதிலொன்று ஐ.நா. வின் பெயர்ச்சிப் பிரிவின் தலைவராக கம்போடியாவில் பணியாற்றியமை (UNTAC) மற்றையது யுகோ சுலாபியாவில், ஐ.நாவின் படைகள் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றியது.

தீர்க்க முடியும் என்பதே ஆகும்.

**நம்பியாரும்–அகாஷியும்**

இவ்விடயத்தில் - யசூசி அகாஷிக்கும் தளபதி சதீஸ் நம்பியாருக்கும் ஒத்த கருத்துக்கள் காணப்படுகின்றன. சதீஸ்நம்பியார் - ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புப் படையின் தளபதியாகவும் சர்வதேச சமாதான அமைப்பின் தலைவராகவும் யூகோசிலேவியாவின் கடமையாற்றியுள்ளார். அது மட்டுமன்றி இவர் அகாஷியுடன் ஏக காலத்தில் யூகோசிலேவியாவில் கடமையாற்றியுள்ளார். இவரை இலங்கைப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் சமாதான அரசின் ஆலோசகராக நியமித்துள்ளார்.

(தொடரும்)

# ஜனாதிபதிக்கும் அரசுக்கும் முறுகல் யப்பான் நிதி உதவியைப் பாதிக்கும்

## பிரதமர் ரணில் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட வின் கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற றதன் மூலம் சிக்கலான சூழ்நிலை தோன்றியிருப்பதாக பிரதமர் ர்ணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

பிலியந்தலை விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அந்நிகழ்வில், தொடர்ந்து பேசிய பிரதமர், நிறைவேற்று அதிகாரத்திற்கும், பாராளுமன்ற அதிகாரத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள இழுபறி நிலை, சகவாழ்வு அரசியலை பாதிப் படையச் செய்கிறது.

இவ்விரு அதிகாரங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினை, எதிர்வரும் ஜுன் மாதம் 25ஆம் திகதி நடைபெற வுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும மாநாட்டை மிக மோசமாகப் பாதிக்கலாம்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நடவடிக்கைகளால் இலங் கைக்கு பெருமளவு நிதி உதவி கள் கிடைத்துள்ளன. இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள் வது தொடர்பாகவே இதுவரை சிக்கல்கள் ஏற்பட்டன. ஆனால், தற் போது இம்மாநாட்டில் அரசாங்கமும் கலந்து கொள்வது தொடர்பாக சிக்கல்கள் தோன்றி யுள்ளன.

இம்மாநாட்டில் இருதரப்பின ரும் கலந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்களை தொடர்ந்து, இலங் கைக்கு கிடைக்கவுள்ள பெருமளவு நிதியுதவி இல்லாமல் போய் விடும் எனவும் பிரதமர் கவலை வெளியிட்டுள்ளார்.

(தி)

# பிலிப்பைன்சில் குண்டுவெடிப்பு 13 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

## இஸ்லாமிய தீவிரவாதக் குழு உரிமைகோரியது

(மணிலா)

பிலிப்பைன்சின் தென்பகுதித் தீவான வின்ரனோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 13 பொதுமக்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன், 20ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

மக்கள் நிறைந்த சந்தைப் பகுதியொன்றில் இக்குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் இடம்பெற்ற சில மணிநேரங்களில் வின்ரனோ தீவின் நகர பிதாவான பெர்னாண்டோவுக்கு பிலிப்பைன்சில் தடை செய்யப்பட்ட அபுஷாயா என்ற இஸ்லாமியத் தீவரவாதக் குழுவைச் சேர்ந்த ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன்னை அறிமுகப் படுத்தியுள்ளதுடன்,

தங்களுடைய அமைப்பே இத்தாக்குதலை நடத்தியதாக கூறியதாகவும் நகரபிதா தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அமைப்பு தமக்குத் தேவையான பணத்தை தரவேண்டும் என்றும் அவ்வாறு தர மறுத்தால் குண்டுத் தாக்குதல்களை தொடர்ந்தும் எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் இதேநகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி என்ற அமைப்பே நடத்தியதாக பிலிப்பைன்ஸ் அரசினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனினும் அந்த அமைப்பு தாம் பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதலை நடத்தவில்லை என்று மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கு 11 வருட சிறைத் தண்டனை

(தெஹறான்)

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருந்தார்கள் என்றும் தடை செய்யப்பட்ட இயக்கத்தை சேர்ந்திருந்தவர்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டு 15 எதிர்க்கட்சி ஆர்வலர்களுக்கு 11 ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையை ஈரான் விதித்துள்ளது.

அத்துடன் மததேசியவாதக் கூட்டணி அமைப்பின் உறுப்பினர்களான இந்தப் 15 பேரும் அடுத்த 10 ஆண்டுகளுக்கு அரசியலில் ஈடுபடுவதற்கும் தடை விதித்து தெஹறானில் இருக்கின்ற சிறப்புப் புரட்சி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தண்டனையைப் பெற்றுள்ள ஒருவர் பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்ததற்காக தங்களுக்கு மிக அதிகமான இத் தண்டனை வழங்கப்பட்டதாகவும்,

இந்த வழக்கு பொதுமக்கள் பார்வையிலிருந்து தனியாக நடத்தப்பட்டது என்றும் தாங்கள் ஈரானில் அதிபர் தேர்தல் நடைபெறுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (உ-2)

# முன்னாள் ஆளுநருக்கு சீனா மரணதண்டனை விதிப்பு

(பீஜிங்)

லஞ்சம் வாங்கியது தொடர்பான வழக்கில் தென்மேற்கு சீன மாகாணமான யுனான் முன்னாள் ஆளுநர் லி-ஸியாடிங்குக்கு பீஜிங் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

எனினும் அந்தத் தண்டனையை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. சீனாவில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் மரண தண்டனை பெரும்பாலும் ஆயுள் தண்டனையாக மாற்றப்படுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. ஊழல் லஞ்சப் புகார் காரணமாக லி-ஸியாடிங் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் கட்டாயப்படுத்தி பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-2)

# ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய லிதுவேனியாவில் கருத்துக் கணிப்பு

(விலனியஸ்)

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது தொடர்பாக லிதுவேனியாவில் மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்படுகிறது.

லிதுவேனியாவில் நேற்று முன்தினம் ஆரம்பமான இக்கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் 27.4 வீதமானவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் கம்யூனிஸ்ட் நாடான லிதுவேனியா உட்பட 15 நாடுகள் அடுத்த வருடம் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

முன்னாள் சோவியத் சமூக குடியரசில் அங்கம் வகித்த நாடுகளில் லிதுவேனியாவும் ஒன்றாகும். (ந-2)

# ஈராக் ஷியா பிரிவு முஸ்லிம்களின் முக்கிய தலைவர் நாடு திரும்பினார்

(பக்தாத்)

வெளிநாட்டில் வாழ்ந்து வந்த ஈராக்கின் ஷியா பிரிவு முஸ்லிம்களின் முக்கிய தலைவரான அஃதுல்லா மொகமத் பஃத் ஹக்கம 23 வருடங்களின் பின்னர் ஈராக்கிற்கு மீண்டும் திரும்பியுள்ளார்.

ஈராக், ஈரான் போரின் காரணமாக 1980 ஆம் ஆண்டு ஈராக்கை விட்டு வெளியேறிய இவருக்கு கடந்த 23 வருடங்களாக வெளிநாடுகள் புகலிடம் வழங்கியிருந்தன.

ஈராக்கின் புரட்சிகர இஸ்லாமிய அதிஉயர் சபைக்குத் தலைமை வகித்து வந்த இவர், ஈரானைப் போன்றே ஈராக்கிலும் இஸ்லாமியச் சட்டப்படி ஆட்சி நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தவர்.

அத்துடன், ஈரானின் மத மற்றும் நிர்வாக அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்தவர்.

அஃதுல்லா மொகமத் ஈராக்கிற்கு தற்போது திரும்பியுள்ளதை அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் மிகவும் அவதானமாகக் கண்காணித்து வருகின்றன.

ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசே ஈராக்கை ஆட்சி செய்ய வேண்டும் என்று இவர் கருத்து வெளியிட்டு வந்தாலும், இவரது செயற்பாடுகள் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கே வழியமைக்கக்கூடும் என்று கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் மக்களின் பெரும் வரவேற்புக்கு மத்தியில் ஈராக்கின் எல்லைக்குள் நுழைந்த அஃதுல்லா மொகமத் ஈராக்கின் தெற்கு நகரான பஸ்ராவுக்குச் சென்றுள்ளதாகவும் அங்கு நடைபெறவிருக்கும் பேரணி ஒன்றில் உரையாற்றவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-2)

# மத்திய கிழக்கிற்கான தாராள வர்த்தகத் திட்டத்தை புஷ் அறிவிப்பு

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கிற்கான தாராள வர்த்தகத் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அறிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வர்த்தக வாய்ப்பை அளிக்கும் நோக்குடனேயே இந்தத் திட்டத்தை இவர் முன்வைத்துள்ளார்.

இத்திட்டம் குறித்து தென் கரோலினா பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய புஷ்,

அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் அரபு நாடுகளுக்கு இது ஒரு கைமாறாக அமையும்.

அத்துடன், இஸ்ரேல் பாலஸ்தீனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் அமெரிக்கா உறுதியோடு இருக்கிறது.

அரபு நாடுகள் கலாசார வாழ்வில் வளர்ச்சி கண்டுள்ளன.

ஆனால் அந்நாடுகள் காலத்திற்கேற்ப பொருளாதார வளர்ச்சியைக் காணவில்லையென்று புஷ் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய கிழக்குப் பகுதியில் சட்ட



ரீதியான ஆட்சி முறையான கல்வி, பெண்களிற்கான உரிமை ஆகியவை செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் புஷ் வலியுறுத்தியுள்ளார். (உ-9)

# சூறாவளியால் பாதித்தவர்களுக்கு அதிபர் புஷ் நிதி ஒதுக்கீடு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ஒக்லோ ஹோமா நகரில் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

சூறாவளி காரணமாக சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒக்லோ ஹோமா நகரூடாகச் சென்ற சூறாவளி காரணமாக 130 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதுடன் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன, 30 ஆயிரம் வீடுகளுக்கான மின்சார விநியோகம் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இப்பகுதியில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (ந-2)

# அமெரிக்க எதிர்ப்பு மையங்களாக மசூதிகள் மாற்றப்பட வேண்டும்

## துபாய் பத்திரிகையொன்றுக்கு சதாம் கடிதம்

(துபாய்)

அமெரிக்க எதிர்ப்பு மையமாக மசூதிகளை மாற்ற வேண்டும் என்று ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கோரிக்கை விடுத்துள்ளதாக பத்திரிகை ஒன்றில் நேற்று முன்தினம் செய்தி வெளியாகி உள்ளது.

சதாம் எழுதியதாகக் கூறப்படும் மே 7 திகதியிடப்பட்ட 6 பக்கக் கடிதம், பக்ஸ் மூலமாகத் தமக்கு வந்ததாக 'அல் காட்ஸ் அல் அராபி' பத்திரிகை கூறியுள்ளது.

அக்கடிதத்தில் சதாம் ஹுசைன் எழுதியுள்ளதாவது,


விரோதிகளை எதிர்க்கும் மையங்களாக மசூதிகளை மாற்ற ஈராக் மக்கள் முயற்சிக்க வேண்டும். அதன் மூலம் தங்களை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதை விரோதி உணருவான்.

தாய் நாட்டைக் காப்பாற்ற அனைவரும் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும். பெட்ரோல் வளமும் சொத்துக்களும் நம்மை விட்டுப் போகக்கூடாது. ஈராக் நாட்டை ஆக்கிரமித்துள்ளவர்களையும், அவர்களது முகவர்களையும் எதிர்த்துப் போராட வேண்டும். அவர்களைப் புறக்கணிக்க வேண்டும். மதம், தேசப்பற்று என்ற அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய கடமை இது.

அண்டை நாடுகள் ஈராக்குக்குப் புறம்பான வழியில் செயல்படுகின்றன. நமது எதிரிகள், துரோகிகளை சிரியா ஆதரிக்கிறது. சி.ஐ.ஏ. மற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளை அவர்கள் தொடர்பு கொண்டு பேச சிரியா அனுமதிக்கிறது. ஆனால் பயங்கரவாதிகள் சில நாட்கள் தங்கினால் கூட அதை சிரியா அனுமதிப்பதில்லை.

ஆக்கிரமிப்பாளர்களை அனுமதித்து முகம்மது பிறந்த புனித பூமியை சவுதி அரேபியா களங்கப்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளது. குவைத்தோ துரோகியாகும்.

ஈரான் கபட நாடகம் ஆடுகின்றது. அரேபியர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் எதிராக அது சதி செய்கிறது என்றும் அக்கடிதத்தில் சதாம் குறிப்பிட்டுள்ளார். (ந-2)



சென்னையில் கட்டப்பட்டிருந்த காயிதே மில்லத்தின் நினைவு மணி மண்டபம் கடந்த வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவின் போது வர்ண மின்குமிழ் வெளிச்சங்களுடன் காட்சியளிக்கும் மண்டபம்

உலக தரிசனம்

# சூடானில் இருதரப்பு பேச்சுக்கள் ஆரம்பம்

(கார்டும்)

சூடானில் யுத்தத்தில் ஈடுபட்ட அரச தரப்பும், மக்கள் விடுதலை இராணுவமும் இறுதிக் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

கென்யாவில் ஆரம்பமான இந்தப் பேச்சுவார்த்தையில் மிகவும் முக்கியமான விடயங்கள் குறித்து ஆராயப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தப் பேச்சுவார்த்தையின்போது இரு தரப்புக்கும் அழுத்தங்கள் கொடுக்கபபடலாம் என இப்பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கும் கென்யா தெரிவித்துள்ளது. (ந-2)

# இந்தோனேஷியாவில் உள்நாட்டு போர் மீண்டும் வெடிக்கும் அபாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் ஆசிய மாகாணத்தில் மீண்டும் உள்நாட்டுப் போர் உருவாகும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

சுந்தரஆசிய அமைப்பின் உறுப்பினர்களை இந்தோனேஷிய அரசு கைது செய்திருப்பதை அடுத்தே இந்த பதற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆசிய மாகாணத்தை தனிநாடாக உருவாக்குமாறு கோரி கடந்த 26 வருடங்களாக சுந்தர ஆசிய அமைப்புப் போராடி வருகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் இவ்வமைப்பு இந்தோனேஷிய அரசோடு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சுந்தர ஆசிய அமைப்பினர் தங்களின் ஆயுதங்களை பொதுக் கிடங்கொன்றில் வைக்க வேண்டுமென்றும் ஆசிய மாகாணத்தில் இருந்து இந்தோனேஷியப் படையினர் விலக வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

ஒப்புக் கொண்டபடி இருதரப்பினரும் செயற்படாததோடு போர் நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சுந்தர ஆசிய அமைப்பைச் சேர்ந்த 4 பேரை இந்தோனேஷிய அரசு கைது செய்துள்ளது.

அத்துடன், அப்பகுதிக்கு மூவாயிரம் படைகளையும் இந்தோனேஷிய அரசு அனுப்பி வைத்துள்ளது.

இந்தோனேஷிய அரசின் இந்தச் செயற்பாடுகளால் எரிச்சல் அடைந்துள்ள சுந்தர ஆசிய அமைப்பினர், தற்காப்புப் படைநிலைகளை தயார் நிலையில் வைக்கும்படி தங்களது போராளிகளிற்கு அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ-9)

# சமுதாய ஒடுக்கு முறைகளின்று விடுபட உதவும் கல்வியே பெண்களின் உயர்வுக்கு கைகொடுக்கும்

20ஆம் நூற்றாண்டில் அரசியல், சமூக,பொருளாதார,விஞ்ஞான,தொழில்நுட்பத்துறை வளர்ச்சியுற்றதன் பின்னணியில் உலகமே இன்று கிராமமாக மாறிவிட்ட நிலையில் சமூகத்திலும் பல மாறுதல்களைக் காணக்கூடியதாக உள்ளது. நமது சமூக அமைப்பில் பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணிகளுக்கிடையே சிக்கித் தவிக்கும் பெண்களை அதிலிருந்து வெளிக்கொணர்வது அவசியம். ஆண்,பெண் என்ற பாரபட்சம் நீக்கி ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக பெண்களும் தமது உரிமைகளைப் பெற்று திறமைகள், ஆளுமைகளைக் கொண்டு சமுதாயத்தில் பல ஆக்கப்பணிகளையும், தொண்டுகளையும், சாதனைகளையும் புரியும் வல்லமை படைத்ததாகப் திகழ ஆவன செய்ய வேண்டும். இந்நோக்கமானது இன்றைய நவீன சமூகத்தில் ஓரளவு மாற்றமடைந்து வந்துள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

### அடக்கியொடுக்கப்பட்ட பெண்ணினம்

ஆரம்ப காலங்களில் பெண்கள் சமுதாய மட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். ‘அச்சம், மடம், நாண்ம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களை முன்வைத்ததுடன் பெண்களை இரண்டாம் இடத்தில் வைத்துப் பார்க்கும் பழக்கமே இருந்துள்ளது. பெண்ணானவள் ஆணுக்கு அடங்கியவள், அவள் தன்னிச்சையாக எதுவும் செய்யமுடியாதவள், அவள் ஆணுக்கு கீழ்ப்படிந்தவளாகவே இருக்க வேண்டும். குடும்பமாக இருந்தால் அக் குடும்பத்தில் உள்ள பாரத்தை சுமபபவள் பெண்ணாகவே இருக்க வேண்டும். அவள் இன்பதுன்பங்களை சகித்துக் கொள்பவளாகவும். நேருக்கு நேர் நின்று முகம் கொடுக்காதவளாகவும் அவளுக்கு எவ்வளவுதான் ஆளுமை இருப்பினும அவள் கிணற்றுத் தவளையாகவே இருக்க வேண்டும் என்ற ஆரம்பப் பின்னணியிலேயே பெண்ணைப் பற்றிய கருத்துக்களும் விமர்சனங்களும் சமூகத்தில் இடம் பெறத் தொடங்கின. சிறப்பாக இத்தகைய கருத்துக்களை இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளிலேயே காணக்கூடியதாக உள்ளன.

பெண்கள் பற்றித் தர்மசாஸ்திரம் ‘பெண்ணானவள் பெற்றோருக்கு கட்டுப்பட்டவளாகவும் திருமணமானபின் கணவனுக்குக் கட்டுப்பட்டவளாகவும் விதைவையான போது புத்திரரின் கட்டுப்பாட்டின் கீழும் இருக்கவேண்டும்’ எனவும் கூறுகிறது. இக்கருத்தைப் பார்க்கின் பெண்ணானவள் ஆரம்ப காலத்திலிருந்து ஏதோவொரு வகையில் அடக்கப்பட்டவளாகவே இருந்துள்ளாள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்ணினம் இன்று பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக (நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும்) ஓரளவு உயர்ந்து வருவதற்கு 1975ஆம் ஆண்டில் ஐ.நா. ஸ்தாபனம் பிரகடனப்படுத்திய சர்வதேச மகளிர் தினம் போன்ற நிகழ்வுகளே காரணம் எனில் அது மிகையாகாது.

### பெண் கல்வியின் பயன்

பெண்புத்தி பின்புத்தி என்று கூறி அவளது ஆளுமைகளையும்,திறமைகளையும் சிதைத்து வந்துள்ள சமுதாயத்தில் இன்று பெண்ணானவள் ஆணினமே வியந்து நிற்கும் அளவிற்கு வளர்ச்சியுற்று வந்தமைக்கு அறிவியல் மிக்க சமுதாயம காணப்படுவதே காரணம். பெணணானவளை அடிமையாகவும்,போகப் பொருளாகவும் பார்க்கும் மரபு இன்று பெண்களாலும் எல்லாத் துறைகளிலும் முன்னேற முடியும் என்பதை வெளிக்காட்டுவதற்கு அவர்களுக்கு கல்வியே கைகொடுத்துள்ளது.

இன்று பெண்கள் வாழும் உலகு

**செல்வி உ. உதயமலர்**
**B.A(Hons)**
**வண். வடமேற்கு**

சிக்கல்களும்,சவால்களும் மிக்கதாகவே காணப்படுகிறது. குறிப்பாக பெண்ணானவள் கணவர், பிள்ளைகள் ,சுற்றத்தார்,அயலவர் என்ற பின்னணியுடன் தொழில், தொழிலில ஈடுபடுவோர் என்ற நிலைகளுக்கு இடையே சிக்கல்களைத் தர்த்து வெற்றிகரமான ஒரு சமநிலையைத் தோற்றுவித்து வாழ்க்கையில் உயர்ந்து வருவதைக் காண முடிகிறது.இந்நிலையில் சமூகத்திலும் ஓரளவு மாற்றத்தைக் காண முடிகிறது. ‘பெண்கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தில் பெண்ணானவள் உயர் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறுவதுடன், தமது பிள்ளைகள் உழைத்து வருவது பெற்றோருக்குப் பிடிப்பதுடன் வாழ்க்கையை இலகுவாக நடத்துவதற்கும் உதவுகிறது.

### சகல துறைகளிலும் முன்னேற்றம்

இன்று உலகிலே சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்பட்ட தேவை அதிகரிப்பும், வாழ்க்கைத்தர உயர்வும் இன்று இருவரும் உழைத்தால்தான் வாழமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. கல்வி மட்டுமன்றி அரசியல், சமூக,பொருளாதார,கலை, கலாசார, விளையாட்டு, விஞ்ஞான தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் பெண்ணானவள் முன்னேறி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.பெண் சுதந்திரமும், பெண் உரிமைகளும் ஓரளவு பெறப்பட்ட நிலையிலும் சிலர் பெண் சுதந்திரம்,சம உரிமைகளைபபற்றி சரியான விளக்கத்தைப் பெறாமல் இழிவுத்தனமாக நடப்பதைக் காண முடிகிறது.எத்தனைதான் பெண் விடுதலை, பெண் சுதந்திரம் என்று கூறினாலும் கல்வி அறிவும் விழிப்புணர்வும் அற்ற பெண்கள் சீதனக்கொடுமை தொடங்கி. பாலியல் வதைகள் போன்ற பல சமூகக் கொடுமைகளுக்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவ்வாறு கொடுமைகளை அனுபவிக்கக் காரணம் 1) அறியாமை, 2) பயஉணர்வு,3) பாரம்பரிய கருத்துக்கள்,4)தாழ்வுச்சிக்கல், 5)பிறபோக்குத் தன்மை,6) சிந்தனை விருத்தி இன்மை, 7) அளவு கடந்த அன்பு, 8)பாசஉணர்வு போன்றனவாகும்.இவற்றில் பெண்ணின் உயர்வுக்கு கைகொடுக்கும் ஒரு முக்கியஅம்சம் கல்வி (Education) ஆகும்.பெண்கள் கல்வி கற்றவர்களாக இருப்பின் அவள் தன்னை பிரச்சினைகளில் இருந்து வெளிக்கொணர முயல்வாள். அது மட்டுமன்றி பெண்ணானவள் சமுதாயத்தில் பல்வேறு வழிகளிலும் உயர்ந்து நிற்பதற்கு கல்வியே அவளுக்கு கைகொடுக்கும்.

ஆகவே பெண்கள் கல்வியைக் கற்பது அவளது குடும்பம், சுற்றம், சூழல் அனைத்திற்குமே வழி வகுத்துக் கொடுக்கும்.எனவே பெண்ணானவள் ‘எரியும் விட்டில் அல்ல விடிவெள்ளி’ என்பதை உணர்த்துவது சாலப் பொருந்தும். □

## இரண்டாயிரம் குடும்பங்கள் மீளக் குடியேற்றம்

(செம்பியன்பற்று)

முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை முல்லைத்தீவு நகரப்பகுதியில் இரண்டாயிரம் குடும்பம்வரை மீளக் குடியேறியுள்ளன.

மருதங்கேணியில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை இத்தகவலை வெளியிட்டார். (உ-42)

## தபாலதிபர்கள் இடமாற்றம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை தபாலதிபர் எஸ்.அரியரட்ணம் கரவெட்டி தபால் நிலையத்திற்கும்,வாழைச்சேனை தபாலதிபர் வீ.கே.தங்கராசா பருத்தித்துறை தபால் நிலையத்திற்கும், யாழ். பிரதேச தபால் திணைக்களத்திலிருந்து ஏ.துரைசிங்கம் வல்வெட்டித்துறை தபால் நிலையத்திற்கும் இடமாற் றம் செய்யப்பட்டுள்ளனர். (உ-52)

## தனியார் பஸ் கொளுத்தப்பட்டது

(கொழும்பு)

ஹாலிய பகுதியில் நேற்று முனதினம் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து இவ் விபத்துக்கு காரணமாக இருந்த தனியார் பஸ் ஆத்திரமடைந்த மக்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

பதுளையில் இருந்து பண்டாரவளை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்-சைக்கிள் ஒன்றுடன் மோதியதால் இவ் அனர்த்தம் ஏற்பட்டது. (தி)

# அபி. லொத்தர் சபை இழுபறிக்கு இணைந்து தீர்வுகாண வேண்டும்

## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வேண்டுகோள்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பாக தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும்,பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க வேண்டும் என்று வர்த்தக சபைகளின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக சம்மேளனம் விடுத்த அறிக்கையில் அரசு-புலிகள் இரு தரப்பினராலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் தற்காலிகமாக இடை நிறுத்தபபட்டதை அடுத்து அதனைத் தொடர்ந்தும முன்னெடுக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சை துரதிஷ்டமானது.

இலங்கைக்கு வரும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான தேவை ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் ஸ்திரத் தன்மை முரண்பாடற்ற அரசியல் போக்குகள் நிலவ வேண்டும்.

தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்ப்பதற்கு பிரதமரும், ஜனாதிபதியும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், சகவாழ்வு அரசியலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

படையை விட்டுத் தப்பியோடி

# கொள்ளைகளில் ஈடுபட்டவரை மடக்கிப் பிடித்தனர் மக்கள்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பியோடி,கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை நீர் கொழும்பு பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நீர் கொழும்புப்பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து,நகை மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டவேளை,இவரை பொது மக்கள் பிடித்துள்ளனர்.

இந்நபர் கொள்ளைக் கோஷ்டி ஒன்றுக்கு தலைமைதாங்கி இராணுவத்தில் இருந்து கொண்டுசென்ற துப்பாக்கியின் துணையுடன் பல கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்டதாக விசாரணைக்ள் மூலம் தெரியவந்துள்ளது. (தி)

# வடக்கு ~கிழக்கைப் பிரிக்க சிங்கள அமைப்பு திட்டம்

(கிளிநொச்சி)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை தனித்தனியே பிரிக்க வேண்டும் எனக் கோரும் அனைத்துத் தரப்பினரோடும் இணைந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிங்கள நாடாளுமன்ற அமைப்பு திட்டமிட்டு வருவதாக ‘புலிகளின் குரல்’ வானொலி குற்றம் சாட்டியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை தனித்தனியே பிரிப்பது மட்டுமன்றி அவற்றிற்கு தனித்தனி ஆளுநர்களை நியமிப்பதற்கும் திட்டமிட்டு வருவதாகவும் இது தொடர்பாக இணைந்து செயற்படுவதாக அகில இலங்கை முஸ்லிம் லீக் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் உடன்பாடு கண்டுள்ள தாகவும புலிகளின் குரல் வானொலி மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

# மத, இன, மொழி வேறுபாடு கடந்த மாபெரும் சமாதானப் பேரணி யாழில்

## ஜூனில் நடத்தத் திட்டம்

(தென்மராட்சி)

வடக்குத் தெற்கில் வாழும் மக்கள் மத்தியில் சமாதானம் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பும் வகையிலான மதஇன, மொழி வேறுபாடு கடந்த மாபெரும் சமாதானப் பேரணி ஒன்று எதிர்வரும் ஜுன் மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக்குழு தெரிவில் சமாதானத்தைப் பகிர்தல் என்றதொனிப்பொருளிலான இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

மேற்படி மாபெரும் சமாதானப் பேரணி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக் குழுத் தலைவர் வண. வ.ந.யோகான் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதில் வண. பிதா சி.ஜி.ஜெயக்குமார், எஸ்.பரமநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

இப்பேரணியில் கலந்து கொள்ள மதக்குழுக்கள், மனித உரிமை இயக்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப் படவுள்ளது.

இதேவேளை, தென்பகுதியில் இருந்து பெருமளவு மூவின மக்களும் இப்பேரணியில் கலந்து கொளளும் வகையிலான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. (உ-77)

# சாரணர் இயக்கத்தை புனரமைக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உடுப்பிட்டி, கோப்பாய் தொகுதிகளில் சாரணர் இயக்க நடவடிக்கைகளைப் புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க மாவட்ட ஆணையாளர் ஏ.ஜெகநாதன் மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க மாவட்ட ஆணையாளர் நிர்வாகத்தை பன்முகப்படுத்தி புனரமைப்பதற்காக பருத்தித்துறை மாவட்டத்தை 4உப-மாவட்டங்களாகப் பிரித்து உதவிமாவட்ட ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை, கரவெட்டி,உடுப்பிட்டி,கோப்பாய் ஆகிய உப-மாவட்டங்களே புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களாகும்.

சாரணர் இயக்க பருத்தித்துறை மாவட்டச் செயலகமொன்றும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் திறக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

அத்துடன், சாரணத்தலைவர்கள் அணித்தலைவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல்கள், பயிற்சி முகாம்கள் நடாத்தப்பட்டுவருகின்றன. இப்பகுதிகளில் உள்ள சகல பாடசாலைகளிலும் குருளைச்சாரணா இயக்கம், சாரணர் இயக்கம், திரி சாரணர் இயக்கங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(உ-52)

# அண்ணனின் வாள் வீச்சில் தம்பியார் படுகாயம்

(கொழும்புத்துறை)

சண்டிலிப்பாய் அம்பாள் ஆலய இரவுத்திருவிழாவில் கலந்து கொண்ட இளைஞர்களிற்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் அண்ணனின் வாள் வெட்டுக்கு தம்பி இலக்கானார்.

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது,

மேற்படி ஆலயத்தில் கடந்த 8ஆம திகதியன்று இரவுநேரத் திருவிழாவிற்காகச் சென்ற மேற்படி இரு சகோதரருக்கும் வேறு சில இளைஞர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது.

இதனால் ஆத்திரமடைந்த அண்ணன் கத்தியால் தாக்க முனைந்த போது ஆள்மாறி இருளில் நின்ற தம்பியார் மீது வெட்டு வீழ்ந்தது. இதையடுத்து அங்கு விரைந்த பெரியவர்கள் சிலர் இரு தரப்பினரையும் சமாதானம் செய்து காயமடைந்தவரை தனியார் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதேவேளை, மேற்படி பகுதியில் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-51)

# நூல்கள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி நூலகத்திற்கு கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஏ.சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக 350 தமிழ், ஆங்கில நூல்களும் அலுமாரியொன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (உ-52)

# இலக்கு என்ற குறிக்கோளை இயம்புவதே தமிழ் இலக்கியம்

## இந்திய முதுநிலை விரிவுரையாளர் திருமதி கஸ்தூரிராஜா

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டை விட இங்கே தமிழ் உணர்வும தமிழ் மொழிப்பற்றும் அதிகமாய் உள்ளதை இங்குள்ள மக்களிடம் உரையாடிய போது நான் உணர்ந்து கொண்டேன். இந்திய நாட்டிலே ஆங்கிலக் கல்வியையே பிரதானமாகத் தமிழர்கள் கொள்வார்கள். ஆனால், இங்குள்ள பாடசாலைகளில் தமிழ் மூலம்தான் கல்விகற்பிக்கபபடுகிறது. இங்குள்ள மக்களது தமிழ் உணர்வு என்னை மெய்சிலிர்க்கச் செய்தது.

இவ்வாறு கூறியுள்ளார் தென்னிந்திய முதுநிலை விரிவுரையாளர் திருமதி கஸ்தூரி ராஜா.

மயிலணி சிவன் கோவிலில் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி அண்மையில் நடைபெற்ற எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டு "தமிழ் இலக்கியங்களில் நிலையாமை" எனும் பொருளில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவிரித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நிலையாமை என்றால் நிலையில்லாதது என்று பொருள்படும். ஆனால், நிலையில்லாதது என்று கூறும்போது நாம் சோர்வடைந்து விடக்கூடாது. அதற்குப்பதிலாக நிலையான ஒன்றை நாம் செய்து விடவேண்டும். ஒரு அரசன் தன் குடிகளை படையாலும், கள்வராலும் இன்ன பிற காரணிகளாலும் வரும் இடரிலிருந்து காத்திட வேண்டும். எந்தச் செயலைச செய்வதற்கும் ஒரு இலக்கு இருக்க வேண்டும். இலக்கு என்ற குறிக்கோளை இயம்புவதே இலக்கியம்.

தொல்காப்பியரிலிருந்து கண்ணதாசன் வரை நிலையாமை பற்றி பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். நிலையாமை என்றால் அழிந்துவிடக்கூடியதல்ல. ஒரு நிலையிலிருந்து இன்னுமோர் நிலைக்கு மாறக்கூடியது. "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" மானிடராய்ப் பிறந்த நாம் எமது உ்யிரை உய்வு பெறச் செய்து இறைவனை அடைந்து விடவேண்டும் அதற்குத் தடையாக ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் உள்ளன. இம்மூன்றினையும் நீக்கிவிட வேண்டும். அதற்கு "அறம் செய்ய வேண்டும். ஔவை யார் அறம் செய்யவிரும்பு" என்றார். திருவள்ளுவர் "அன்றறிவோம் எனாது அறம் செய்க" என்றார்.

"மாற்றரும் கூட்டம் சாற்றிய பெருமை..." என்றார் தொல்காப்பியர். ஒருவனது மரணமானது அவனது உயிருக்கு வழங்கப்படும் ஓய்வாகும். அதையே திருககுறளில் "நெருநல் உளனொருவன் இனறில்லை எனும் பெருமை பற்றி இவ்வுலகு" என்று கூறியுள்ளார் வள்ளுவர். நேற்றிருந்தவர் இன்றில்லை எனும் பெருமையுடையது இவ்வுலகம். இதனாலேயே தொல்காப்பியர் இல்லறத்தின் பின்னரே துறவறத்தை மேற்கொள்ளுங்கள் என்றார். அவரையடுத்து வந்த இலக்கியவாதிகளும் அதைத்தான் கூறியுள்ளார்கள்.

இவ்வுலகில் அன்பு நிலையில்லாதது. செல்வம் நிலையில்லாதது. அவற்றை நிலைப்படுத்த நாம் அறம் செய்யவேண்டும். திருப்பணிகளை செய்யவேண்டும். அவற்றை உரிய காலங்களில் செய்தல் வேண்டும்.

இலக்கியங்களில் இயல்பாக தருமம் செய்யென்றார்கள். அகம கூறும் இலக்கியங்களில் பொருள் தேடி பிரிந்து சென்ற தலைவனை எண்ணிக்கலங்கும் தலைவிக்கு மிருகங்களின் அன்பை உதாரணம் காட்டி பின் நிலையாமை பற்றிக் கூறியுள்ளார்கள்.

"சுனைவாய் சிறுநீரை யெய்தா என்றெண்ணி பிணைமான் இனிதுண்ணவேண்டி கள்ளத்தின் ஊச்சும் சோமென்பர்காதலர் உள்ளம் படர்ந்த நெறி" இந்த நெறியில் வந்த நீ தலைவனின் பிரிவுக்காய் கலங்குவது நியாயம் அல்ல என்று கூறியுள்ளனர். இந்த நாட்டில் ஆண்கள் நல்லவர்களாக இருந்துவிட்டால் எல்லாம் நல்லதாகவே நடக்கும்.

நிலையாமையை உணர்ந்தால உலகில் போர் நிகழாது என்றார். தென் இந்தியப் பேராளரும், கவிஞருமான தெய்வநாயகி சோதி உரையாற்றுகையில்,

பெண்கள் காலையில் எழுந்திட வேண்டும். வாசல் தெளித்து கோலம் போடவேண்டும்.

இலட்சுமியை வேண்டி கதவைத்திறந்து வைத்திருக்க வேண்டும். விளக்கேற்ற வேண்டும். கொண்ட கணவனோடு வம்புச் சண்டைக்குப் போகக்கூடாது. புகுந்தவீட்டில் பிறந்த வீடு பற்றி புகழக்கூடாது. இவற்றைக் கடைப்பிடிக்கும் பெண்களின் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

மேலும், ஒரு பெண் தனது கூந்தலை அவிழ்த்து விடக் கூடாது. நுனிமயிர் பூமியை நோக்கக் கூடாது. கண்ணகி தனது கூந்தலை விரித்து போட்டதால் மதுரையே எரிந்தது. பாஞ்சாலி கூந்தலை அவிழ்த்து விட்டதனால் பாரதமே அழிந்தது. நுனிமயிர் நிலம் நோக்குவது தவறு என்று திருவள்ளுவரும் கூறியிருக்கிறார். பிறந்தநாள், திருமண விழாக்களில் கேக் வெட்டி கொண்டாடுவதைவிட ஏழை எளியோருக்கு உணவிடுவதே சிறப்புமிக்கது.

இவ்வாறான வாழ்க்கை நெறிமுறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். (உ-8)

## உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை ஒரு லட்சத்து 20 ஆயிரம் உல்லாசப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

கடந்த வருடம் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அமெரிக்கா, நெதர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன், பிரிட்டன், சுவிற்சர்லாந்து, இந்தியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்தே பெருமளவு உல்லாசப்பயணிகள் இலங்கை வந்துள்ளனர். (தி)

## திருட்டுக் குறித்து புலிகளிடம் முறைப்பாடு

(கொழும்புத்துறை)

அரியாலை மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளில் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து மேற்படி இடங்களில் மீண்டும் விழிப்புக் குழுக்கள் கடமையில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

இத்திருட்டுக்கள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.(உ-51)

## அம்பாறைத் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டும்

### தளபதி ரமேஸ் அழைப்பு

(அம்பாறை)

அம்பாறைமாவட்டத்தில் வாழும் தமிழ் - முஸ்லிம்மக்கள் தமக்கிடையே நல்லுறவை வலுப்படுத்தி, ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக திகழவேண்டும் என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்துள்ளார்.

காரைதவு சண்முக வித்தியாலதத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற தமிழ்-முஸ்லிம் பாடசாலைகளின் கல்விஅபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலிலேயே ரமேஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்துக்கூறுகையில், அரசியல்வாதிகளின் சுயலாப நடவடிக்கைகளுக்கு முஸ்லிம்மக்கள் பலியாகதவாறு நல்லுறவைப் பேணுவதற்கு முஸ்லிம் பெரியார்கள் புத்திஜீவிகள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

மீண்டுமோர் யுத்தம் வெடிக்கும் என மக்கள் அஞ்சத் தேவை இல்லை அரசாங்கத்தின் வாக்குறுதிகள் நிறைவேறும் வரையே பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். (தி)

## நம்பியாரின் அறிக்கை நடுநிலையானது

### டக்ளஸ் பி.பி.ஸிக்கு பேட்டி

(லண்டன்)

நம்பியாரின் அறிக்கை நடுநிலைமையாகத் தயாரிக்கப்பட்டது என்றே கருதுகிறேன்..

படையினருக்கு புலிகள் மீதும் புலிகளுக்கு படையினர் மீதும் பரஸ்பர சந்தேகம் இருப்பதால், இந்த பரஸ்பர சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இவ்வடயத்தை அணுகவேண்டும் என்று நம்பியார் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்குகிழக்கில அமைந்துள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் மக்கள் அங்கே மீளக்குடியமர்வதற்கு தடையாக இருக்கிறது.

எனவே, அவற்றை அகற்ற வேண்டும் என்ற பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை அடுத்து இது தொடர்பாக ஆராய்ந்த இந்திய முன்னால் இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை தொடர்பாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் இவ்வாறு பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தாய்லாந்தில் இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவின்படியே சதீஸ் நம்பியார் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அழைக்கப்பட்டார்.

மக்களின் நலன்களைக் கருதியே இவ்விடயம் தொடர்பாக நாங்கள் அணுகவேண்டும். எங்களுக்கு முக்கியமானது மக்கள் மீளக்குடியமர வேண்டும.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பிரச்சினை ஏற்பட்டதே யுத்தத்தால்தான். இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வுகாண வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் மக்களை மீண்டும் பலிக் கடாவாக்கத் தயாரில்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

இருந்தாலும் நடுநிலைமையாக இந்தப்பிரச்சினை அணுக்கப்படுவதினால் மக்களுடைய நலனை முன்னெடுத்துத்தான் அரசும் புலிகளும் அணுக வேண்டும் என்பது எங்களுடைய நிலைப்பாடாக இருக்கிறது என்றார். (உ-3)

## வட பிராந்தியத்தில் முன்னோடியாய் திகழும் சாவ.லயன்ஸ் கழகம்

(தென்மராட்சி)

வடபிராந்தியத்திலுள்ள 19 லயன்ஸ் கழகங்களுள் சிறந்த கழகமாக சாவ கச்சேரி லயன்ஸ்கழகம் அண்மை யில் கொழும்பில் நடைபெற்ற வருடாந்த மாநாட்டில் தெரிவு செய்யபபட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் சாதனைகளைப் பாராட்டி விருதுகளும் வழங்கப்பட்டன.

இக்கழகத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின சேவைகளைப் பாராட்டி மாவட்ட ஆளுன ரால் இவ்விருகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமரக்கோட்டம் ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 ஆம் திகதி புதன்கிழமை சங்கா பிஷேகத்துடன் நிறைவு பெறவுள்ளது. (ந-10)

## அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம்

### வர்த்தமானி அறிவிப்பு தாமதம் பாதகம் எதுவும் இல்லை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொறுப்பேற்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குந்தகம் எதுவும் ஏற்படவில்லை என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி இது விடயமாக ஆணையைப் பிறப்பித்ததும், அது செல்லுபடியாகும் தன்மையை பெற்றுவிட்டது.

இவ்விவகாரம் தொடர்பாக அரசாங்க அச்சக ஊழியர்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் மீது வசாரணை நடத்துவதென ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத் துள்ள கடிதத்திற்கு இன்று பதிலளிக்கப்படும்.

எவ்வாறாயினும் இவ்விவகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்ப செயலகம் விரும்பவில்லை எனப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## புலமைப்பரிசில் நிதியங்கள்

(பருத்தித்துறை)

முனனாள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் அமரர் ஏ.சுப்ரமணியம் ஞாபகார்த்தமாக இரு புலமைப்பரிசில் நிதியஙகள் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இக்கல்லூரியில் கல்வி கற்று நுண்கலைக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஒரு புலமைப் பரிசில் நிதியமும் இக்கல்லூரியில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று தொடர்ந்தும் கல்லூரியில் கல்வி கற்கும் ஏழை மாணவர்களுக்கு வழங்குவதற்கென ஒரு புலமைப் பரிசில் நிதியுமம ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம தெரி வித்தார். (உ-52)

## பயிற்சி முடித்த போராளிகளுக்கு பதக்கம் வழங்கிக் கௌரவிப்பு

(திருகோணமலை)

பயிற்சியை முடித்துக்கொண்ட போராளிகளுக்கு பதக்கங்களும் சானறிதழ்களும் வழங்கும் நிகழ்வு திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில், பயிற்சியை முடித்த 50 இளைநிலை அதிகாரிகள், 15 பதுங்கிச் சுடும் போராளிகள் உட்பட பலருக்கு பதக்கங்களும சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பதக்கங்களை திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பதுமனும், சான்றிதழ்களை திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக், தமிழீழத்தேசிய கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் துரைரடணசிங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழக திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் மதனராசா, தளபதி பாபு ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில், விடுதலைப் புலிகளின் பிராந்தியத்தளபதிகள், போராளிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (உ-5)

# இலங்கையில் சிங்களம் வளம்பெற வழி சமைத்தது செம்மொழியாகிய தமிழே!

## பேராசிரியர் ஆனந்த திஸ்ஸகுமார

(கொழும்பு)

**செம்மொழியாகிய தமிழ் மொழியை உள்ளீர்த்துள்ளமை காரணமாகவே சிங்கள மொழி வளம் பெற்றுள்ளது. அத்துடன், சிங்கள மொழியில் பயன்படுத்தப்பட்டு வரும் பல சொற்கள் தமிழ் சொற்களாகவே உள்ளதென்று கொழும்பு பல்கலைக்கழக மொழியியற்துறைப் பேராசிரியர் ஆனந்த திஸ்ஸகுமார தெரிவித்துள்ளார்.**

குருநாகல் பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் விபர்ஷா மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் மொழி பெயர்ப்பாளர்களுக்கான செயலமர்வு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அச்செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பேராசிரியர் ஆனந்த திஸ்ஸகுமார இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சிங்கள மக்கள் 'பிரித்நூல்' என்னும் சொல்லை அடிக்கடி பயன்படுத்துவார்கள். இதன் சரியான சிங்கள வடிவம் 'பிரித்குய' என்பதாகும். குய என்பது சிங்களத்தில் நூலைக் குறிக்கும். ஆனால் இங்கு குய என்ற சிங்களச் சொல்லை சிங்கள மக்கள் பெரும்பாலும் பிரயோகிப்பது இல்லை. 'நூல்' என்ற தமிழ்ச் சொல்லையே அதற்குப் பதிலாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதுமட்டுமன்றி 'சிஹல உறுமய' என்ற அரசியல் கட்சியின் பெயரில் கூட 'உறுமய' என்பது தமிழ் சொல்லாகும். இப்படி பல உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

தென்னிந்தியாவின் தாக்கம் காரணமாக தமிழ் மொழி முக்கியம் பெற்றுக் கண்டி இராச்சியத்தின் இறுதிக்காலம் வரை காணப்பட்டது. இது இன்று அதிக வளம் பெற்றுவிட்டது.

ஒரு மொழிபெயர்ப்பாளன் யாவற்றையும் அறிந்தவனாக இருப்பதுடன், தனது பணியை ஒழுங்காகச் செய்வதன் மூலம் நாட்டில் காணப்படும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு இன்மையை இல்லாமல் செய்ய முடியும் என்றார். (உ-10)

## இருபாலை கிழக்கில் இரவோடிரவாக மண் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்குப்பகுதியில் சட்டவிரோதமாக மண்அகழ்வு இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 10மணிக்குப் பிறகு உழவுஇயந்திரங்கள் மூலம் இவ்வாறு அகழப்படும் மண் கொண்டு செல்லப்படுவதாக அக்கிராமவாசிகள் கூறுகின்றனர்.

இவ் மண் அகழ்வுகள் அரியாலை கிழக்கின் பொது இடங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இதேபோன்று அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(உ-7)

## திருகோணமலையில் தாழமுக்கம்

(கொழும்பு)

திருகோணமலையில் இருந்து 700 கிலோமீற்றர் கிழக்காக ஏற்பட்டுள்ள தாழமுக்கம் புயலாக மையம் கொண்டு வருவதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இதனால் நாட்டின் தென்கிழக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து தென்மேற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களில் 15 தொடக்கம் 30 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## பௌத்தத்தை பரப்பும் வகையில் வாழ்த்து அட்டைகள் வெளியீடு

(கொழும்பு)

வெளிநாட்டுஅமைச்சும், இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையும் பௌத்த மதத்தை உலகெங்கும் பரப்பும் நோக்கத்துடன் பல விசேட வெசாக் வாழ்த்து அட்டைகளை வெளியிட்டுள்ளன.

இந்த விசேடவாழ்த்து அட்டைகள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக கவரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

'இலங்கைக்கான பயணம்' 'தூய பௌத்த மதத்திற்கான பயணம்' ஆகிய தொனிப்பொருளில் இந்த வாழ்த்து அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன.

அத்துடன், அந்தவாழ்த்து அட்டைகளில் இலங்கையில்உள்ள பௌத்த வழிபாட்டுத்தலங்கள், பௌத்த சுவரோவியங்கள், பௌத்த கலாசாரங்கள் என்பன அழகாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு குறைந்த விலையில் இவற்றை விற்பனை செய்வதன்பொருட்டு அந்தந்த நாடுகளில உள்ள இலங்கைத் தூதரங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

## சட்டமா அதிபரின் ஆலோசனை

(கொழும்பு)

பிரமுக வங்கியில் இடம்பெற்ற மோசடிகள் சம்பந்தமாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சட்டமாஅதிபரின் ஆலேசனையைப் பெறவுள்ளனர்.

மத்தியவங்கியின் உத்தரவைத் தொடர்ந்து மேற்படி வங்கியின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தவகையில் குற்றப்புலனாய்வு உறுப்பினர் நூற்றுக்கும் அதிகமானோரை விசாரணைக்கு உட்படுத்தியதுடன், இவ்வங்கியை மூடிவிடுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (தி)

## அரச காணிகள் தொடர்பில் தேசியக் கொள்கை தயாரிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரசாங்கக் காணிகள் தொடர்பாக தேசிய கொள்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக காணி அமைச்சர் ராஜித சேனாரத்னா தெரிவித்துள்ளார்.

அத்துடன், காணிகள் தொடர்பாக தரவு வங்கி ஒன்றை நிறுவுவதற்கும் தமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும்,

எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் காணிகளைப் பொறுத்த வரையில் இந்த தேசிய கொள்கைகளின் பிரமாணங்களை அவ்வரசு கடைப்பிடிக்கும் என்றும் கூறியுள்ளார். (உ-10)

## திலீபன்மருத்துவமனையின் ஓராண்டுப் பூர்த்தி விழா

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் மாமுனை முதல் கட்டைக்காடு வரையிலான பிரதேசத்தில் மீளக் குடியேறிய மக்களிற்கு அரும்பணியாற்றி வரும் ஆழியவளை பிரதேசத்தில் உள்ள திலீபன் மருத்துவமனையின் ஓராண்டு நிறைவு விழா எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

திலீபன் மருத்துவமனை வைத்தியர் சீ.ஈழவாணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கடற் புலிகளின் முக்கிய பிரமுகர்களும், அரச-அரசசார்பற்ற நிறுவன அலுவலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-42)

## நாளை நடுவப் பணியகத்தில் புலிகள்-கூட்டமைப்பு சந்திப்பு

### சங்கரியும் பங்கேற்பார்

(திருநெல்வேலி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அரசியல்துறை கிளிநொச்சி நடுவப் பணியகத்தில் இடம்பெறவுள்ள இச்சந்திப்புக்கு கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர் எனவும்,

இந்தச் சந்திப்பில் முக்கியமாக தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாக இது இருக்கும் எனக் கருதப்படுகிறது.


இதேவேளை, மேற்படி சந்திப்புக்கான அழைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரிக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள ஆனந்தசங்கரி எம்.பி.யை அணுகி இச்சந்திப்பில் பங்கேற்பீர்களா என வினவியபோது,

விடுதலைப்புலிகளுடனான கடந்த இரு சந்திப்புக்களிலும் நான் திட்டமிட்டுக் கலந்து கொள்ளாது விடவில்லை. அப்படியானதோர் தேவையும் எனக்கில்லை.

இவ் இரண்டு சந்திப்புக்களும் இடம்பெற்ற காலங்களில், நான் வெளிநாடுகளில் அவசர காரியமாக தங்கி நின்றதால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

இருப்பினும் தற்போது நான் நாடு திரும்பிவிட்ட நிலையில் நாளை ஒழுங்கு செய்யப்பட்டுள்ள புலிகளுடனான சந்திப்பில் என்னால் நிச்சயம் கலந்து கொள்ள முடியும் என்றார். (உ-43)



கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நிர்மானிக்கப்பட்ட வியாகுல அன்னையின் திருத்தலத் திறப்புவிழாவிலே கொழும்புத்துறை குருமட அதிபர் அருட்திரு. மங்களராஜா அடிகளார் மந்திரிப்பதையும், யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் ஜே.பி.செல்வராஜா அடிகளார் திருத்தலத்தை திறந்து வைத்து உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

படம் : பரு.நிருபர்

## யுனிசெவ் வழங்கிய சீருடைத்துணி மோசடி?

(கொழும்பு)

மூதூர் வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சீருடைத் துணிகள் இன்னமும் உரியவர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

யுனிசெவ் அதிகாரிகள் மூதூர்ப் பகுதிகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இவ்விடயம் தெரியவந்துள்ளது.

4 ஆயிரத்து 800 மீற்றர் சீருடைத்துணிகளை வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கவென யுனிசெவ் நிறுவனம் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக ஆராய யுனிசெவ் அதிகாரிகள் குழுவொன்று இன்று மீண்டும் அங்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## இன்று ஒரு தகவல்

# என்ன எதிர்பார்க்கிறார்கள்?

ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவருடைய உறவினர் ஒருவர் ஒரு நேர்முகத்தேர்வுக்கு (இன்டர்வியூ) போயிருந்தாராம். மிகவும் பொறுப்பாகவும், கவனமாகவும் செயல்படவேண்டிய பதவிக்கான நேர்முகத் தேர்வு அது. இவரிடம் நிறைய மார்க்ஸ் இருந்தது. ஏராளமான சான்றிதழ்களும் இருந்தன. இன்டர்வியூவில் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் சரியாகப் பதில் சொல்லிவிட்டார். இருந்தாலும் அந்த நேர்முகத் தேர்வில் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. என்ன காரணம் என்று பின்னர் விசாரித்த போது தான் விபரம் தெரிந்ததாம்.

அந்த நேர்முகத்தேர்வில் இவர் நடந்து கொண்ட முறையில் சில தவறுகள் நடந்து போய்விட்டதாம். முக்கியமாக இரண்டு தவறுகள் ஒன்று அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள்ளேயே இவர் பதில் சொல்ல ஆரம்பித்துவிட்டாராம். இரண்டாவது இவர் நாற்காலியில் தாரளமாக உட்காராமல், நாற்காலியின் முனையில் உட்கார்ந்திருந்தாராம். இந்த இரண்டுவிதமான செயற்ப்பாடுகளும், இவர் அவசரப்படுவார். பதட்டப்படுவார் என்பதற்கான அடையாளங்களாம். பார்க்கப் போகிற வேலைக்கு அவசரம், பதட்டம் இவை இரண்டும் இருக்கக் கூடாதாம். அதனால் "மார்க்" இருந்தும் சான்றிதழ்கள் இருந்தும் அந்த வேலைவாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை.

வேலை கொடுப்பவர்கள் நம்மிடமிருந்து என்னதான் எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. அவற்றை ஒவ்வொன்றாக இப்பொழுது பார்ப்போம். முதலில் தொடர்பு கொள்ளும் திறமை. நீங்கள் நினைப்பதை அழகாகத் தொகுத்து வகைப்படுத்திச் சொல்லத் தெரிகிறதா என்று பார்ப்பார்கள். உங்கள் திட்டங்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் வெளிப்படுத்த உங்களால் முடிகிறதா என்று பார்ப்பார்கள். இதற்கு என்ன செய்வது? குழப்பமில்லாமல் சிந்திக்க வேண்டும் - பேச வேண்டும்.

இரண்டாவது விஷயம் - புத்திசாலித்தனம் ஏற்றுக் கொள்ளப்போகிற வேலையை நல்லவிதமாக உங்களால் செய்யமுடியுமா? அதை எந்தெந்த வழியில் செய்யலாம் என்பதை உங்களால் தீர்மானிக்க முடியுமா? அந்த வேலைக்கான புதுப்புது யோசனைகளை உங்களால் சொல்ல முடியுமா? என்று பார்ப்பார்கள். மூன்றாவது - தன்னம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா என்று பார்ப்பார்கள். எந்தச் சூழ் நிலையையும் சமாளிக்கவேண்டும் எப்படிப்பட்ட மனிதர்களையும் சமாளிக்கும் தைரியம் வேண்டும். மற்றவர்களை நமக்குச் சாதகமாகத் திருப்பக் கூடிய தன்னமிபிக்கை வேண்டும்.

நாலாவது - பொறுப்புக்களை முன்வந்து ஏற்றுக் கொள்ளுதல் பொறுப்புக்களிலிருந்து நழுவிப் போக ஆசைப்படாமல் செய்துமுடிக்கவேண்டும். ஐந்தாவது- முன்வருதல் வேலையின் முக்கியத்துவம் உணர்ந்து அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை தயங்காமல் எடுக்க முன்வர வேண்டும். ஆறாவது- தலைமைத்துவம் நாலுபேருக்கு தலைமைதாங்கி நல்ல விதத்தில் நடந்து கொள்ளத்தெரிகிறதா? ஏழாவது- கற்பனைத் திறன் சிலபிரச்சினைகள் வரக் கூடும் என்று முன்கூட்டியே யூகித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் திறமை உண்டா என்று பார்ப்பார்கள். எட்டாவது- வளைந்து கொடுத்தல் சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி, மாற்றங்களுக்குத் தகுந்த மாதிரி அனுசரித்து நடந்து கொள்ளத் தெரிகிறதா என்று பார்ப்பார்கள். அடுத்தது திறமைகளை வெளிக்கெணரும் திறமை. மற்றவர்களிடம் இருக்கிற திறமையைக் கண்டுபிடித்து அதை நல்ல விதத்தில் ஊக்கப்படுத்தி பயன்படுத்தத் தெரியுமா என்று பார்ப்பார்கள். மற்றது - சுய அறிவு மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா? என்பது முக்கியம். அடுத்தது போட்டி மனப்பான்மை மற்றவர்களை ஒப்பிட்டுப் பார்த்து அதைவிட ஒருபடி மேலே வரவேண்டும் என்கின்ற குணம் வேண்டும். அடுத்தது - குறிக்கோளை வெல்லுதல். குறிக்கோளைச் சவாலாக எடுத்துக் கொண்டு அதை அடையவேண்டும். அதன் பின்னர் வேறுபட்ட திறமைகள், பதவிக்கு வேண்டிய திறமைகள் தவிர, மற்றைய திறமைகள் ஏதும் உண்டா என்பதும் முக்கியம். நமக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று நினைக்கிறவர்கள், நம்மிடமிருந்து இவ்வளவும் எதிர்பார்ப்பார்கள் அதற்குத் தகுந்த மாதிரிநம்மை நாமே தயார்ப் படுத்திக் கொள்ளவேண்டும்.

எனக்கு வேண்டிய ஒருவர், ஒரு நேர்முகத்தேர்வுக்குப் போய்விட்டு வந்தார். எப்படி நேர்முகத் தேர்வு இருந்தது? என்று விசாரித்தேன். "நான் போனேன். அவர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் அவர் எதிர்பார்த்தது மாதிரியே எல்லாப் பதில்களையும் சொன்னேன். கடைசியாக நான் எதிர்பார்க்காத ஒரு தகவலை அவர் சொன்னார்" என்றார்! என்ன? என்று கேட்டேன். "அவரும் என்னைப் போன்று நேர்முகத் தேர்வுக்கு வந்தவர்தானாம். சும்மா என்னைக் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தாராம்" என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

---

கடல்மட்ட உயர்வை எதிர்த்துப்

# போரிட வருமாறு இலங்கைக்கு அழைப்பு

## மாலைதீவு ஜனாதிபதி விடுப்பு

(கொழும்பு)

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மாலை தீவு ஜனாதிபதி அப்துல்ஹையூம் தற்போது தனது நாட்டை சூழந்துவரும் பேராபத்தான கடல் மடட உயர்வை எதிர்த்துப் போராட வருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பில்டன் ஹொட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

இது குறித்து இலங்கையைச் சேர்ந்த நிபுணர்களுடன் கலந்தாலோசித்துள்ளதாக தெரிவித்த ஹையூம்,

தாழ் மட்டத்தில் உள்ள நாடுகளுக்கு பூகோள வெப்ப உயர்வு என்பது பிரச்சினைக் குரியதல்ல. சூழல் தரம் குன்றுதல் என்பது இலங்கைக்கும மாலை தீவுக்கும் முக்கிய பிரச்சினையாகும் என தெரிவித்தார்.

மேலும் இது தாழ்ந்த கடல் மட்ட நாடுகளை மட்டுமன்றி, அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைநத நாடுகளில் கூட எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சினையாகும்.

பு,கோள வெப்பஉயர்வு காரணமாக கடல் மட்ட அதிகரிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் மாலைதீவு முக்கியமானது. இங்குள்ள கடற்கரைகளில் ஏராளமான முருங்கைக் கற்பாறைகள் உள்ளன. நாம் கடல் மட்டத்தில் அடிக்கடி கண்காணிக்கிறோம. நாடு பூராவும் ம்ரங்களை நடும் திட்டங்களை நடைமுறைப் படுத்துகிறோம். முருகைக்கல் அகழ்வை தடைசெய்கிறோம்.

ஐ.நா. சபையில் கடல் மட்டம் 2மீற்றர் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட பின், 1987ல் தொடங்கி மாலைதீவு இது பற்றி கூடிய கவனம் செலுத்தத்தொடங்கியது.

பின 1997ல் கடல் அடியிலிருந்து மண் எடுக்கப்பட்டு பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டன. தலை நகர் மாலைதீவு கடல் மட்டத்திலிருந்து 1.5 மீற்றர் உயரத்திலேயே இருக்கிறது. 1987ல் தான் பயணம் செய்த வாகனத்தை கடல் அலை மூடி இந்து சமுத்திரத்தினுள் இழுத்துச் சென்று விட்டது. அப்போது நாட்டுமக்களுக்கு பாதுகாப்பு தேவையென நான் உணர்ந்தேன் என்றார்.

ஆசியாவில் நீண்டகாலம் ஆட்சியிலிருக்கும் தலைவர் என்ற சிறப்பைப்பெறும் ஹையூம் 1978லிருந்து ஆட்சியில் இருந்து வருகிறார். இவர் ஆட்சியில் தனிநபர் வருமானம் 200 அமெரிக்க டொலரிலிருந்து 2ஆயிரத்து 100 அமெரிக்க டொலராக உயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

(தி)

---

# அரியாலையின் அவல நிலை குறித்து அரசியல் வாதிகள் எண்ணிப்பார்ப்பதில்லை

## அரசாங்க அதிபர் ஆதங்கம்

(தென்மராட்சி)

பொதுமக்கள் தமது உரிமைகளையும் தேவைகளையும் அரசிடமிருந்து கேட்டுப்பெற வேண்டும். நாம்மௌனமாக இருப்போமேயானால் எமது உரிமைகள் தேவைகள் எம்மை வந்தடையாமலே போகின்ற நிலையே உருவாகும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதபர் செ. பத்மநாதன், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலகத்தில் கிளை அலுவலகத்தினை நேற்று சம்பிரதாய பூர்மாகத் திறந்து வைத்து உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலர் எஸ். முருகையா தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழாநிகழ்வில் அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் கிளை அலுவலகத்தின பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் மற்றும் அரச அதிகாரிகள் சமூகமளித்திருந்த இந்நிகழ்வில், அரசாங்க அதிபர் செ. பத்மநாதன தொடர்ந்தும் உரையாற்றும் போது,

அரியாலை கிராமம் கல்விமான்கள், அரசியலாளர்கள், அறிஞர்கள் மற்றும் பிரமுகர்களை உருவாக்கிய கிராமம். ஆயினும், இன்றைய காலகட்டத்தில் அரசியல் தலைமை இல்லாமை காரணமாக ஒரு பலமிக்க சக்தியாக இக்கிராமம் திகழவில்லை. இன்று இருக்கின்ற வாக்களிக்கும் முறைமை காரணமாக அரசியல் வாதிகள் கூட தமது நிலையில் இருந்து இறங்கி வந்து தமது பணிகளை கிராமிய மட்டத்தில் செய்ய முற்படுவதில்லை.

எப்படியும் எமக்கு இங்கு வாழ்கின்ற மக்கள் தமது வாக்குகளை போடுவார்கள் என்ற எண்ணமே இதற்குக்காரணமாகும். இன்றைய நிலையில் எமது மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் பல கிராமங்கள் இருக்கின்றன. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவைகள், பிரச்சினைகள் பல உள்ளன. இந்நிலையில அரியாலையை அண்டியுள்ள ஆறு கிராம சேவையாளர்கள் பிரிவில் வதியும் பொதுமக்களுக்கு வளமான சேவையை வழங்கும் பொருட்டு இக்கிளை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

மக்கள் தமது தேவைகள், உரிமைகள் பற்றிய அழுத்தங்களை தரவேண்டும். அரியாலைப் பகுதியில் இராணுவத்தின கட்டுபபாட்டில் இன்னமும் 74



வீடுகள் இருக்கின்றன. பல இடங்களில் கண்ணிவெடிகள் இன்னமும் அகற்றப்படாமல் இருக்கின்றன. இப்பகுதி வாழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியும் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களுமே குரலெழுப்புவதில்லை - உதவுவதில்லை. எனக் குறிப்பிட்டார்.

இவ்வைபத்தில் யாழ்ப்பாணப் பல்லைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், மின்பொறியியலாளர் எஸ். கணநாதன், தலைமைக் காரியாலய உதவி அரச அதிபர் பொ. வீரகத்திப்பிள்ளை, யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சொலமன்.சூ. சிறில், நிலையத் தலைவர் திருமதி தேவகி தனராஜ் உடபட வேறும் பலர் உரைநிகழ்த்தினர்.

(உ-77)

---

## இராசி பலன்

**12.05.2003**

**(சித்திரை 29, திங்கள்)**

**ஏகாதசி மு.இ 7.08 வரை**
**உத்தரம் மு. இ. 7.57 வரை**
**இராகுகாலம் 7.24 - 8.54**
**சுபநேரம் 11.54 - 1.24**

ஏகாதசி விரதம்

**மேடம்**
எடுத்தகாரியம் கைகூடும், செல்வாக்கு, போசனசுகம், சத்துருஜெயம்

**இடபம்**
வியாபார விருத்தி, சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம், புத்திரரால் கவலை

**மிதுனம்**
தாய்வழிஉறவு, உடல் சோர்வு, எதிர்பாராத நன்மை, காரியதாமதம்

**கடகம்**
சுவாரஷ்யமான நிலை, வருமான அதிகரிப்பு, அந்நியர் உதவி, தொழில் விருத்தி

**சிங்கம்**
வீண்செலவு, காரியதாமதம், கடுமையான வார்த்தை, பிரயாணம்

**கன்னி**
தர்மம், தெளிந்தசிந்தை, முயற்சி கைகூடும், விருந்துபசாரம்

**துலாம்**
பிரயாணக் கஷ்டம், உறவினர் மனஸ்தாபம், காரியதாமதம், சுபசெலவு

**விருச்சிகம்**
சென்றஇடத்தில் செல்வாக்கு, சகோதரர் உதவி, காரிய சித்தி, நல்ல செய்தி

**தனுசு**
உற்சாகம், தொழில் முன்னேற்றம், நல்ல சம்பவம், பிறர் உதவி

**மகரம்**
ஆழ்ந்த சிந்தை, கட்டுப்படுதல், தொழில் உத்வேகம், பயணம்

**கும்பம்**
காரிய தாமதம், போசனசுகம், வாகனபயம், சயனசுகக் குறைவு

**மீனம்**
களஸ்திர நன்மை, கௌரவமான நிலை, காரிய அனுகூலம், தனலாபம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

---

# புதிய இடமாற்றத்திட்டம் அடுத்த ஆண்டுமுதல் அமுல்

(கொழும்பு)

உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கான புதிய இடமாற்றத் திட்டம் அடுத்த வருடத்தில் இருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி ஒரு திணைக்களத்தில் தொடர்ந்து 5 வருடங்களாக பணியாற்றியவர்கள் இவ் இடமாற்றத்துக்கு உட்படுத்தப்படுவார் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

(தி)

---

# குடியிருப்பாளர் மாநாடு தலைமைப் பதவி இலங்கைக்கு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் 19ஆவது குடியிருப்பு மாநாடு நேற்று முன்தினம் நைரோபியில் முடிவடைந்துள்ளது.

இம்மாநாட்டில் வீடமைப்பு பெருந்தோட்டஉட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைக குழுவினர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இம்மாநாட்டில் வடகிழக்குப பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறியுள்ளனர்.

இதேவேளை, இம்மாநாட்டில் ஆசிய பிராந்தியத்திற்கான தலைமைப்பதவி அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் 100 அங்கத்துவ நாடுகளில இருந்து 500க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(தி)

முறைப் படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.
– குறள்

வலம்புரி

## குழம்பிய அரசியல்

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததையடுத்து அரசுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான முறுகல் நிலை வலுவடைந்துள்ளது. அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை தனக்கிருக்கக் கூடிய அதிகாரத்தைப் பிரயோகித்து விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தேறிய இலாபம் ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்படுவது வழக்கம். ஆனால் அந்த வழக்கத்தை அமைச்சர் மிலிந்த மொறகொட சீராக அமுல் படுத்தாத காரணத்தினாலேயே தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி தனது அதிகாரத்திற்குள் கொண்டு வந்துள்ளார் என அவரது தரப்பில் நியாயங்கள் முன் வைக்கப்படுகின்றன.

மறுபுறத்தில், அமைச்சரின் கீழ் உள்ள பொறுப்புக்களை கைமாற்றும் போது அது பற்றி பிரதமருடன் கலந்தாலோசித்த பின்னரே குறித்த முடிவை ஜனாதிபதி எடுக்க வேண்டும். இதுவே, சம்பிரதாயம். ஆனால் அந்த சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்காமல்-பிரதமருக்கு எதுவுமே தெரியப்படுத்தாமல் இரவோடு இரவாகத் தயாரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழ் இருந்த தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி தனக்குள் ஆட்படுத்திக் கொண்டமை மிகப் பெரும் தவறாகும். இது அரச தரப்பு நியாயம்.

இவ்வாறு இருதரப்பும் தத்தம் நியாயங்களை முன் வைத்தாலும் அவற்றின் முடிபு ஜனாதிபதிக்கும், அரசுக்கும் இடையிலான முறுகல்நிலையை மேலும் வலுவடையச் செய்யுமே தவிர சுமுக நிலைக்கு வழிசமைக்காது.

இந் நிலையில், ஊடகத்துறை அமைச்சையும் ஜனாதிபதி தனது அதிகாரத்திற்குட்படுத்தலாம் என்ற ஊகம் பரவலாக அடிபடுவதால் அரசு திகைத்துப் போயுள்ளது. ஜனாதிபதியின் இத்தகைய போக்குக்கு அடிப்படைக் காரணம் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பலமின்மையே. ஆகையால், பொதுத் தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதே ஜனாதிபதியின் சேட்டைக்கு முடிவு கட்டும் வழியாகுமென ஐ.தே.முன்னணி அமைச்சரவை கருதுகின்றது.

ஜனாதிபதியின் தொந்தரவு காரணமாக பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு பிரதமர் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்ய முடியும். அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டாலும அதனை நடை முறைப்படுதத வேண்டுமென்ற தேவை ஜனாதிபதிக்கு இல்லை.

நாடு அடிக்கடி தேர்தல்களைச சந்தித்தால் அது பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நம்பத்தகுந்த காரணத்தை முன்வைத்து ஆட்சி மாற்றத்திற்கான ஏற்பாட்டை ஜனாதிபதி மேற் கொள்ள முடியும்.

அத்தகையதொரு நிலைமை ஏற்படுமாக இருந்தால் பொது ஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி இணைந்த கூட்டு அரசு அமைவதற்கான வாய்ப்பு அதிகமாகவே இருக்கும். அவ்வாறு கூட்டரசு அமைந்தால் அதன் விளைவு மீண்டும் இந் நாட்டில் யுத்தமே. சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுமென்று ஜனாதிபதி கூறினாலும் ஜே.வி.பி அதற்கு இடம் கொடாதென்பது திண்ணம்.

# பக்திப்பரவச உணர்ச்சிகளைத் தூண்டிவிட்ட மரியாயின் சேனையின் ஆச்சேஸ்விழா நிகழ்வு

கடந்த 3-5-2003 சனிக்கிழமையன்று ஆச்சேஸ் விழா காலை 9.30மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ்.கொமிசியத் தலைவி சகோதரி வைலற் இம்மனுவேல் தலைமையில் ஆரம்ப செபத்துடனும், செபமாலையுடனும் ஆரம்பமாகியது. இவ்விழாவிற்கு தீவகம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களிலிருந்து சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிரசீடியங்களிலிருந்து பெருந்திரளான உறுப்பினர்கள் பிரசீடியக்கொடிகளுடனும் வெண்ணிற ஆடைகளுடனும்-மரியாயின் பக்தியை வெளிப்படுத்தினர். மறை உரையாற்றிய கிளறிசன் சபைத் தலைவா அருட்திரு ரெக்ஸ் கொன்ஸ்சன்ரைன் தமது உரையில் 'புனித மரியாள் தன்னை முழுவதுமாக இதோ உமது அடிமை என இறைவனின் சித்தத்துக்கு ஒப்படைத்தார். அதேபோன்று மரியாயின் சேனையாளர்களும் தங்கள்பணி வாழ்வில் வாழ வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

### சத்தியம் செய்தல்

மரியாயின்சேனை ஆன்மீக இயக்குநர் அருட்திரு றெஜிராஜேஸ்வரன் குருநகர் புனித-யாகப்பர் ஆலய உதவிப்பங்குத் தந்தை அருட்திரு அருள்செல்வத்துடன் இணைந்து அலங்கரிக்கப்பட்ட அன்னையின் சொரூபத்திற்கு முன்பாக சேனையார் சத்தியப்பிரமாணம் செய்யும் வெக்சியத்தின் தண்டில் இருகுருக்களும் ஒன்றாகச் சேர்ந்து கைவைத்து 'என் அரசியே என்தாயே நான் முழுவதும் உமக்கே சொந்தம் என்னிடமுள்ளதெல்லம் உமக்கே சொந்தம்' என்ற வார்த்தையைச் சொல்லி தங்களை ஒப்புக்கொடுத்ததைத் தொடர்ந்து சேனையாளர்களும் தங்கள் சேனைக்கொடிகளுடன் இருவர் இருவராகச் சென்று தங்களை மரியன்னைக்கு ஒப்புக்கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து சகோதரி வைலற் இம்மனுவேல் மனித-மீட்புத்திட்டத்தில் மரியன்னையின் பங்களிப்பு மிக முக்கியமானதென்பதை உள்ளடக்கிய ஒப்புக் கொடுத்தல் செபத்தைச்சொன்னார். அத்துடன் சங்கிலிச் செபமும் சொல்லப்பட்டது.

### பக்திப் பிரவாகம்

திருப்பலியின் ஆரம்ப உரையில் கொமிசியத் துணைத்தலைவர் சகோதரர் ஜே.ஈ.இராசநாயகம் அன்னைக்கு நாம் அளிக்கும் வாக்குறுதி சொல்லிலும் செயலிலும் பிரதிபலிக்கவேண்டும். சேனையாளரின் வாழ்வைப் புதுப்பித்து வரப்போகும் ஆண்டில் கூடிய ஆர்வத்துடன் பணியைத் தொடர இறைவனின் அருள்கொடையும் மரியன்னையின் வழிநடத்தலும் துணைநிற்க வேண்டும் எனக் கூறினார். திருப்பலியை ஒப்புக் கொடுத்த ஆன்மீக இயக்குநர் அருட்திரு றெஜிராஜேஸ்வரன் தமது அருளுரையில் இவ்விழாவிலே பெருந்திரளான சேனையார் பக்திப்பிரவாகத்துடன் வாஞ்சையாகப் பங்குபற்றும் நிகழ்வைக் கண்டு யாழ்ப்பாண திருச்சபை மகிழ்கின்றது என்றார். இறையரசின் விழுமியங்களுக்கு அர்ப்பணிப்புடன் 'தாயே நான் உமக்கு சொந்தம். எனக்குள்ளதெல்லாம் உமக்கே சொந்தம்' என்ற வார்த்தையை இருவர் இருவராகப் பக்திப் பற்றுதலுடன் உணர்ச்சிகளை உள்ளத்தில் தூண்டிவிடும் வகையில் அமைந்த நிகழ்வுக்காட்சி இறைவிசுவாசத்தையும் வழிபாட்டின் முதிர்ச்சியையும் உணர்வு பூர்வமாகக் காட்டுவதாக இருந்தது,

வீ.பிரான்சீஸ்

என்றும் யேசு தனது வாழ்வாலும் போதனையாலும் இறைவனைக் காட்டியதுபோலவும், மரியாள் யேசுவின் சீடராக இருந்து யேசுவைக் காட்டியது போலவும் நாமும் நமது வாழ்வில் மற்றவர்களுக்கு யேசுவைக் காட்ட வேண்டும் எனவும் கூறினார். ஈற்றில் கொமிசியச் செயலாளர் திருமதி சகோதரி பிறின்ஸ் நன்றி கூறினார்.

# யாழ். குடாநாட்டில் வெசாக் பண்டிகைக்கு விரிவான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வெசாக் பண்டிகை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளில் ஸ்ரீலங்கா படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

புத்தபெருமானுக்கு போதி மரத்தின் கீழ் ஞானம் கிடைத்த புனித நாளாகிய இந் நாளினை படையினர் தாம் தங்கியுள்ள இடங்களில் கொண்டாடுவதற்காக வெசாக் வெளிச்சக் கூடுகள் அலங்கார தோரணங்கள் என்பவற்றை அமைத்து வருகின்றனர்.

யாழ். ஆரியகுளச்சந்தியில் அமைந்துள்ள விகாரை, நயினாதீவு நாகவிகாரை என்பவற்றில் வெகு சிறப்பான பூஜை வழிபாடுகளும் இத் தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (உ-4)

# 'குழந்தைகளின் வேண்டுகோள்' நூல் வெளியீடு 17ம் திகதி

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற சுகாதாரக் கல்வி அதிகாரி இணுவையூர் கா. வைத்தீஸ்வரன் எழுதிய "குழந்தைகளின் வேண்டுகோள்" நூல் வெளியீடு எதிர்வரும் 17ம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயக கோவிலில் யாழ். மாவட்ட பலநோக்குச் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி என். சிவராசா கலந்து கொள்வார்.

நூல் வெளியீட்டு உரையை கவிஞர் சோ. பத்மநாதனும், நூல் ஆய்வுரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியர் கா.வைத்தீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். (ந)

# ஒருநாள் போட்டித்தொடர் நியு,சிலாந்து அணியிடம் பாகிஸ்தான் தோல்வி

(கொழும்பு)

தம்புள்ளையில் நடை பெற்று வரும் சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று பாகிஸ்தானுக்கும் நியூசிலாந்திற்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெற் போட்டியில் நியூசிலாந்து அணி 7விக்கெற்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 43.1ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் அக்தர் 27 ஓட்டங்களையும், அணித் தலைவர் லத்தீப் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சேன்பொண்ட், டரல் ர.பி, ஸ்கொட்டைரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 27.3 ஓவர்களில் 3விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வென்றது.

கிரஸ்நெவின் 28 ஓட்டங்களையும், லோவின்சன் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் பெற்றனர். (ந-5)

# பயிற்சிக் கருத்தரங்கு

(நெல்லியடி)

வடக்கு கிழக்கு அரச பதவி நிலை உத்தியோகத்தருக்கான ஒழுக்காற்று விசாரணை தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று சிலிடா நிறுவனத்தினால் எதிர்வரும் 19-ம் திகதி முதல் 23-ம் திகதி வரை கொழும்பு சிலிடா நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ளும் பதவி நிலை உத்தியோகத்தர்களின் விபரங்கள் யாவும் அவர்கள் பணிபுரியும் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-44)

# பரு.பாடசாலை கட்டடம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஷ் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வகுப்பறை கட்டடங்களை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் சுமார் 8லட்ச ரூபாய் செலவில் புனரமைத்து வழங்கியுள்ளது. அத்துடன் நூற்றி இருபது மாணவர் கதிரைகளும் நூற்றிஇருபது மேசைகளும் பத்து ஆசிரிய மேசைகளும் நிறுவனத்தினால் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. (உ-52)

# பண்டத்தரிப்பில் புதிய ஆலயம்

(சில்லாலை)

பண்டத்தரிப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அன்னை ஆலயம் இன்று பி.ப. 5மணிக்கு விசேட ஆராதனைகளின் பின் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதேவேளை நாளைக் காலை 7.30மணிக்கு இவ் ஆலயத்தில் திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. (ந-58)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் நாளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறுமென பதில் பிரதேச செயலர் இ.சிவபுண்ணியம் அறிவித்துள்ளார். (உ-52)

# நவாலிப் பகுதியில் புதிய படைநிலைகள் அமைப்பு

## மக்கள் க. கா. குழுவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்மேரிஸ் சனசமூக நிலைய வளாகத்தில் சிறுவர் பூங்கா அமைத்துள்ள பகுதியில் இலங்கை இராணுவத்தினர் புதிய அரண்களை அமைத்து வருவதாக யாழ்ப்பாணம் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கடிதம் மேற்படி சனசமூக நிலையத் தலைவர் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட இக் கடித விபரம் வருமாறு:

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த எமது மக்கள் ஒப பந்தத்திற்கு பிற்பாடு ஏ-9 பாதையூடாக மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

இந்த வேளையில் நமது கடலோரத்தில் இருக்கின்ற வீடுகளிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் மீளக் குடியமர முடியாத நிலையில் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றோம். இவ்விதம் இருக்க சில காலங்களாக இராணுவத்தினர் தமது நிலைகளை இவ்விடங்களில் புனரமைத்து வருகின்றனர்.

அத்துடன் எமது சனசமூக நிலைய வளாகத்திலுள்ள சிறுவர் பூங்காவிலும் தொழிலாளர் ஓய்வெடுக்கும் கட்டடத்திலும் மீளக் குடியமர முடியாத நிலை இப் பகுதிக் குடும்பங்கள் ஆறுமாத காலமாக வசித்து வருகின்ற நிலையில் அவர்களை வெளியேறுமாறு இராணுவத்தினர் பணித்துள்ளதுடன் இவ்விடத்தில் புதிய இராணுவ அரண்களையும் அமைத்து வருகின்றனர். இதனால் எமது மக்கள் பெரும் துன்பங்களையும் சிரமங்களையும் அடைந்து வருகின்றார்கள்.

எனவே இவ்விடயத்தில் நீங்கள் கூடிய கவனம் செலுத்தி எமது கடலோரத்தை அண்டிய காவலரண்களை அகற்றி எமது மக்களின் இன்னல்களை நீக்கித் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துத் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (உ-10)

ஓம் தினசரி தியானம்

## ஆத்மாவின் பெருமை

பரம்பொருள் அல்லது ஆத்மா எங்கும் ஒன்றே. பசுவினிலும், கயவனிலும், பக்தனிலும், உழைப்பாளியிலும், அரசினிலும் ஒன்றே! உண்மையான மகிழ்ச்சியின் இருப்பிடம், எங்கும் நிறைந்திருக்கும் ஆத்மா. அதாவது நீங்களே. ஆத்மாவின் பேரின்பம் மிகுதியும் மேம்பாடுடையது. கடவுள் உங்கள் அருகில் உள்ளார். உங்கள் இதயத்துள் கட்டுப்பட்டுள்ளார். சுவாசத்திலும் நெருக்கமாகவும், கைகள் பாதங்களை விட அருகிலும் இருக்கிறார். அவர் நீங்களாகவே இருக்கிறார். ஆத்மாவிலும் இருக்கிறார்.

சுவாமி சிவானந்தர்

# குருபூசை

(அளவெட்டி)

சைவ வாலிப சங்கத்தின் ஆதரவில் வருடாந்தம் நடத்தப்படும் உமாபதி சிவாச்சாரியார் குருபூசை நாளை செவ்வாய்க்கிழமை 10மணிக்கு அளவெட்டி சற்குணசாமி ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

விசேட நிகழ்வாக கூட்டுப் பிரார்த்தனை, புராணப்படனம் ஓதல், மகேஸ்வர பூசை என்பன நடைபெறவுள்ளன. (உ-63)

## உதை பந்தாட்டப் போட்டி
## அல்வாய் மனோகரா அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் வதிரி பொம்மஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

மணற்காடு அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நேற்று நடை பெற்ற இறுதியாட்டத்தில் இரு அணிகளும் இறுதி வரை 2:2 என்ற கோல் கணக்கில சம நிலையில் இருந்தன.

இதனையடுத்து தண்டனை உதை வழங்கப்பட்டது. அதன் மூலம் அல்வாய் மனோகரா அணி 3:2 கோல் கணக்கில் வெற்றி பெற்றது இவ் ஆட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சிக் கோட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் தயாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வடமராட்சி இணைப்பாளர் அரவிந்தனும் கலந்து கொண்டனர். (ந-5)

## புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பின்னர்
## 8000 இராணுவத்தினர் தப்பி ஓட்டம்
## ஆய்வு அறிக்கைகள் தகவல்

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைசாத்திட்ட பின்னர் கடந்த வருடம் மட்டும் 8000 பேர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

யுத்தநிறுத்த காலப்பகுதியிலும் இராணுவத்தினர் ஏன் தப்பி ஓடி விடுகிறார்கள் என்ற ஆய்வு ஒன்றை மேற்கொண்ட போது இத்தகவல் தெரியவந்துள்ளது

அந்த ஆய்வு அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவத்தில் கடமை ஆற்றுவோருக்கு போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை காரணமாகவே இராணுவத்தில் இருந்து படையினர் தப்பி ஓடுகின்றனர் என்றும் அந்த ஆய்வு அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இக்காலப் பகுதியில் இராணுவத்திற்குப் புதிதாக ஆட்களை சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போதும் 500பேருக்கு குறைவாகவே இராணுவத்தில் சேர்ந்துள்ளனா. (ம)

## ஜனாதிபதி மீது குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்படும்
## அமைச்சர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டமை தொடர்பாக எழுந்துள்ள அரசியல் நெருக்கடி குறித்து கலந்துரையாட வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்கா, பந்துல குணவர்த்தன, லொக்கு பண்டார, கருணசேன கொடித்துவக்கு ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

தகவல் திணைக்களத்தில் நேற்று அமைச்சர்கள் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியாளர் மாநாட்டில் அமைசசர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் செயற்பாடு அரசின் அமைப்பு விதிகளை மீறுவதாக உள்ளது. இது ஜனநாயகத்துக்கு பெரிய அச்சுறுத்தல். இதனை ஒருபோதும் நாம் அனுமதிக்கமாட்டோம். இது விடயம தொடர்பாக பிரதமருடன் ஜனாதிபதி பேசித்தீர்க்க வேண்டும். இல்லாவிட்டால் ஜனாதிபதி மீது குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (வ)

## கூட்டமைப்பு எம்.பிக்களுடன் கிறிஸ்ரினா இன்று சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்று கொழும்பில சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அதற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைவரங்கள் குறித்து இச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப் படவுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் தலைவர் ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம்,ரவிராஜ் ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர். (வ-5)

## அமெ. இராஜாங்க அமைச்சர் நேற்றுக் கொழும்பு வருகை

(கொழும்பு)

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய அவரை அமெரிக்க தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா, தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகவும்,யப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாடு தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்,மிலிந்த மொறகொட ரவூப் ஹக்கீம் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (வ-5)

## முஸ்லிம் காங்கிரஸ் கூடியது முடிபு எதுவும் எட்டப்படவில்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடம் நேற்று அவசரமாக கூடியபோதும் எந்தவிதமான தீர்க்கமான முடிபுகளும் எட்டப்படவில்லை என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அபிவிருத்தி லொத்தர் சபை பொறுப்பேறகப்பட்டதைத் தொடர்ந்து எழுந்துள்ள ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை தொடர்பாக உயர் மட்ட கூட்டத்தில் ஆராயப்பட்ட போது அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பரிமாறப்பட்ட போதும் எந்த விதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை. (வ)

### அமரர்...

குமார் பொன்னம்பலம் மற்றும் குமாரின் மகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதேவேளை அமரர் குமார் பொன்னம்பலத்திற்கான மாமனிதர் விருது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ந-5)

### பாதுகாப்பு...

புலிகளுக்கு எதிராக மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்றும் ஜனாதிபதயுடன நெருங்கிய வட்டாரங்கள தெரிவித்துள்ளன. அதேவேளை இம் மாத இறுதிக்குள் அரசியலில் எதிர் பாராத திடீர் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (வ)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவின் தென் மேற்கு பகுதியில் நேற்று முன் தினம் ஏற்பட்ட தாழமுக்கம் சிறிய புயற்காற்றாக தீவிரமடைந்து யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கு நோக்கி 700 கிலோமீற்றர் தூரத்தில் மையம் கொண்டுள்ளதாக வளிமண்டல திணைக்களம் அறிவித்துள்ளது.

இத்தாழமுக்கம் மேலும் தீவிரமடைந்து வடமேற்கு திசை நோக்கி நகரலாம் என்றும் இதன்காரணமாக வானத்தில் முகில் கூட்டங்கள் நிறைந்து காணப்படும் என்றும் வளிமணடல திணைக்களம் அறிவித்துள்ளது. இதனால் வடக்குக் கிழக்குக் கடற் பரப்பில் கொந்தளிப்பு நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## இன்று முதல் அரச அச்சகம் இயங்கும்

(கொழும்பு)

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் இன்றில் இருந்து வழமை போல் இயங்கும் என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்துள்ளார்.

அச்சகத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதர்க தெரிவித்த அவர், அச்சக கூட்டுத்தாபனத்தில் மேலும் பிரச்சினைகள் ஏற்படாது தடுக்கவே சீல் வைக்கப்பட்டதாகத் தெரிவித்தார். (வ-5)

## வேர்:கல் நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தமிழகப் பேராசிரியர் முனைவர் கு.அரசேந்திரனின் உலகம் பரவிய தமிழின் வேர்:கல் நூல் அறிமுக விழா நாளை பிற்பகல் 3.30மணிக்கு யாழ்.பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது. இந் நிகழ்வுக்கு தமிழ் பாட நெறியை கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (வ்-5)

ஓராண்டை நிறைவு செய்து இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் செலான் வங்கியை வாழ்த்துகின்றோம்.

☼ கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்,
☼ சிறந்த முறையில் சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும்
☼ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும்,
நாடுங்கள்;



எரிக்சனைஸ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6120)

RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT

RAMCO CEMENT

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து

SLS-107 அங்கீகாரம் பெற்றது
ISO-9002 தரம் பெற்றது
BSS-12-1991 தரத்திற்கு அமைவானது

ஆசியாவில் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாகத் தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சீமெந்து (கோபுரம் மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

• தற்பொழுது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்கு துறையில் இன்று தொடக்கம் (12.05.2003) இறக்கப்படவுள்ளது.

★ முன் கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.
★ மக்களின் பல லட்சம் ரூபாய் பணத்தை மிச்சப்படுத்திய முதலாம் தர சீமெந்து ராம்கோ சீமெந்து.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்

ஈஸ்வரபகவான் & கொம்பனி

91,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P .No. 021-222 2350

(C/6121)

RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT RAMCO CEMENT

உங்கள் வலம்புரியின் சங்குநாதம்

* எரிக்சோலின் யாழ்.விஜயம்.
* நம்பியாரின் அறிக்கை என்ன சொன்னது!
* ஈழராஜா எல்லாளன் தொடர்கதை.
* ஆலடி மாநாடு (நகைச்சுவையுடன் கூடிய அதிரடி)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.